"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி - 2018




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

21

# RUBY'S
CATERING

020 8799 7180
www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 26

# கலசம்
# KALASAM

ஒலி 88

www.saivamunnettasangam.com

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## அருகிவரும் மரபுகளும் கலாசாரங்களும்

“ஊரோடு ஒத்து வாழ்” என்றொரு தமிழ்ப் பழமொழி உண்டு. அதேபோல ஆங்கிலத்தில், "When you are in Rome, be like a Roman" என்றும் ஒரு பழமொழி உண்டு. எந்த ஊரில் இருக்கின்றோமோ அந்த ஊரின் சட்ட திட்டங்களுக்குப் பணிந்து வாழவேண்டும்; அங்குள்ள பாரம்பரியம், கலாசாரம், பழக்க வழக்கங்களுக்கு மதிப்பளித்து வாழவேண்டும் என்பதையே இந்தப் பழமொழி கூறுவதாகக் கொள்ளல்வேண்டும். அது ஒரு நியாயமான எதிர்பார்ப்புமாகும். ஆனால், ஆங்கிலப் பழமொழியில், Be like a Roman என்று சொல்லப்பட்டதே தவிர, Become Roman, அதாவது அவர்களாகவே மாறிவிடு என்று அது சொல்லவில்லை.

ஆங்கிலப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை இதற்கு ஒரு நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். ஜனவரி மாதம் முதலாம் திகதி இந்நாட்டவருக்குப் புதுவருடம் ஆகும். தமிழராகிய நமக்கு அது புத்தாண்டன்று. ஆனால் இந்த நாட்டிலே நாம் வாழ்வதாலும், உலக வழக்காக அது எங்கும் கொண்டாடப்படுவதாலும், அதை அநுசரித்து, மக்களுக்கு வாழ்த்துச் சொல்லி, விடுமுறை தினத்தைக் கொண்டாடுவதில் தவறு ஏதும் இல்லை; அப்படித்தான் செய்யவும்வேண்டும்.

ஆனால், நமது தைப்பொங்கல், வருடப்பிறப்பு ஆகியவற்றைக் கொண்டாடுவதை விட்டு, ஜனவரி முதல்நாளை நமக்கும் புத்தாண்டு என்று சொல்லி, நம் கோயில்களுக்கு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குச் சென்று வழிபடுவதும், வீட்டிலே வந்து பொங்குவதும் தேவையான நடைமுறையா? என்பது நாமனைவரும் நம்மைக் கேட்கவேண்டிய கேள்வி. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு ஆகிய தினங்களைக் கொண்டாட, வேலை, விடுமுறை கிடைக்காது என்பன நாம் சொல்லும் காரணங்கள். நம்முடைய சமய விழாக்களை, கலாசார கொண்டாட்டங்களை அரை மனத்துடன் கொண்டாடுகிறோம்; அல்லது கொண்டாடாமலே விட்டுவிடுகின்றோம். ஆனால், ஜனவரி முதலாம் நாளைமட்டும் விமரிசையாகக் கொண்டாடு கிறோம். நம்முடைய பிள்ளைகளுக்கும் நம்முடைய திருநாள்களை அறிமுகம் செய்யாது விட்டு, இந்நாட்டுப் பாணியிலே இந்த நாட்டுக் கொண்டாட்டங்களை மட்டும் கொண்டாடுவதால் நம்முடைய சமய, கலாசாரங்களைப் புறந்தள்ளுபவர் ஆகிறோம். இதனால், அடுத்த தலைமுறை சுய அடையாளத்தை இழக்கும் அபாயம் உருவாகும். பிள்ளைகளுக்குப் பிறமொழிப் பெயர்களைச் சூட்டுவதிலிருந்து, உணவுப் பழக்கவழக்கங்களிலும் நமது கலாசாரங்களை, மரபுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம். **உதட்டளவில் மட்டும் தமிழ், தமிழ் என்று உரக்கக் கத்துவதில் பயன் எதுவும் இல்லை.**

**க.ஜெகதீஸ்வரன், ஆசிரியர்.**

# இந்த இதழில்

உழவர் திருநாள் - தமிழர் பெருநாள் 03

தையொன்று பிறந்தது மீண்டும் - பொங்கல் கவிதை 10

கந்தனுக்குரிய விரதங்கள் - கந்தபுராணச் சிந்தனைகள் 07

ஓம்காரம் - பணயக் கட்டுரை 14

சைவ சமயம் 18

சிவாகமங்களும் ஆலயவழிபாடும் 20

"திருமந்திரம் ஓர் அறிமுகம்" - ஓர் அறிமுகம் 31

நல்ல பண்பாளர் ஒருவரை நாம் இழந்துவிட்டோம் 33

திருமந்திரத்தில் - சைவ சித்தாந்தம் - யோகாசனம் 34

அமுதத் தமிழில் ஆகமத்தை அருளிய வள்ளல் 40

மழை நின்றது..... ஓர் உண்மை நிகழ்வு 43

Hinduism in search of answers 45

**அட்டைப்படம்: கூகிள் மின்னம்பலம்**

***We express our gratitude to "Baba Luxy" - Jeyalux digital for their invaluable contribution to the Saiva Munneta Sangam (U.K)***

# உழவர் திருநாள் - தமிழர் பெருநாள்

மு. க. மாசிலாமணி B.A

சமயமும் சமயம் சார்ந்த வழிபாட்டு மரபுகளும் பண்பாட்டு விழுமியங்களும் தமிழ் மக்களுடைய வாழ்வியல் நெறியுடன் பின்னிப்பிணைந்த, பிரிக்க முடியாத ஓரம்சமாக மிக நெடுங்காலமாகவே இடம்பெற்று வந்திருக்கின்றன. தமிழ் மக்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டாடும் விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள், சடங்காசாரங்கள் ஆகிய அனைத்துமே ஏதோவொரு வகையில் ஆழ்ந்த அர்த்தம் உள்ளவை; பொருள் பொதிந்த அவர்தம் பண்பாட்டின் உயர்வினை உலகுக்கு உயர்த்திக் காட்டுபவை. இவ்விதம் அவர்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடும் விழாக்களில், "தைத்திருநாள்" என்ற பொங்கற் பெருநாள் அனைத்துத் தமிழ் மக்களாலும் ஒவ்வொரு வருடமும் தைமாதம் (ஜனவரி நடுவில்) முதலாந் திகதி கொண்டாடப்படும் பெரு விழாவாகும். சூரியன் தனுசு இராசியிலிருந்து மகர இராசிக்குள் பிரவேசிக்கும் தை மாதப்பிறப்பான இத்தினத்தை, "மகர சங்கிராந்தி" என்பர். "உத்தராயண" காலத்தின் ஆரம்ப நாள் அது. அதாவது மார்கழிமாதம் வரை நிலவிய தட்சணாயன காலம் - மழை, பனி, குளிர் - முதலியன நீங்கி, வசந்த காலத்தின் ஆரம்பநாளான இத்தினத்தை மிகக் குதூகலத்துடன் வரவேற்குமுகமாக சூரியனுக்குப் பொங்கிப் படைத்துப் பெரும் பண்பாட்டு விழாவாகத் தமிழர் கொண்டாடுகின்றனர்.

எத்தகைய துன்ப துயரங்களை வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற சூழ்நிலையிலும், மக்கள் தம் வாழ்க்கையில் விடிவை - முன்னேற்றத்தினை - மகிழ்ச்சியினை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கும் என்றும் தயாராகவும் திட நம்பிக்கையுடனுமேயே வாழ்கின்றார்கள். அதனைத்தான் அவர்கள் மனதில் ஆழப்பதிந்துள்ள **"தை பிறந்தால் வழி பிறக்கும்"** என்பன போன்ற முதுமொழிகள் (Proverbs) மிகத் தெட்டத் தெளிவாக விளம்புகின்றன. வாழுங்காலத்தில் துன்ப துயரங்கள் ஏற்படலாம்; தொடர்ந்து தொல்லை தரலாம்; பின் நீங்கலாம்; இறப்புக்கூட ஏற்படலாம். இவையெல்லாம் மனித வாழ்வில் புதியனவல்ல. வாழ்க்கை இனியது எனக் கர்வம்கொள்ளவும் கூடாது. அது துன்பம் நிறைந்ததெனப் புறந்தள்ளவும் கூடாது என்பதைச் சங்கப் புலவன் கணியன் பூங்குன்றன்,

**"யாதும் ஊரே யாவருங் கேளிர்**
**தீதும் நன்றும பிறர்தர வாரா**
**நோதலுந் தணிதலு மவற்றோரன்ன**
**சாதலும் புதுவதன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே......"**

என்று கூறுவதுபோலத் துன்ப துயரங்களைக் கண்டு மனம் சோர்ந்துவிடாது எதிர்நீச்சலடித்து வாழ்தலே வாழ்க்கை; அதுதான் மனித வாழ்வின் வெற்றியின் இரகசியம் என்ற பற்றுறுதியினையும் திட நம்பிக்கையினையும் மக்கள் மனங்களிற் பசுமரத்தாணிபோல் பதியச் செய்து வாழ்க்கையினை வளம்படுத்திச் செழிப்பாக்குவனவே தைப்பொங்கல் போன்ற பண்டிகைகளும் விழாக்களும் ஆகும்.

மனித இனத்தின் வரலாற்றில் நில்மானிய பொருளாதார அமைப்பில், விளைநிலம் (Arable land) முக்கியத்துவம் பெற்றதன் காரணமாக அந்நிலப் பயன்பாட்டினால் நன்மையடைந்த வேளாண்மைச்

சமூகம், அந்த நிலத்திலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு மூலகாரணமான சூரியனை நன்றியுடன் போற்றுகின்ற ஒரு பண்பாட்டு விழாவாகவே தைப்பொங்கற் பண்டிகையினைக் கொண்டாடுகின்றது. தைப்பொங்கல் விழாவில் சூரியனே முதன்மைப்படுத்தப்படுகின்றான். உலகில் உயிரினங்கள், தாவரங்கள் உயிர்வாழ்தலே சூரியனால்தான். அவற்றுக்குத் தேவையான வெப்பமும் வெளிச்சமும் நீரும் குளிரும் சூரியனிடத்திலிருந்தே கிடைக்கின்றன. பூமிக்குக் கிடைக்கும் அனைத்துச் சக்திகளுக்கும் சூரியனே காரணம். அதனால், சூரியனை நன்றியுடன் போற்றி வழிபடுகின்ற ஒரு பண்பாட்டு மரபு, மனித சமூகம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடத் தொடங்கிய; நாகரிகமடையத் தொடங்கிய மிகத் தொன்மைக் காலத்திலேயே உலகம் பூராவும் நிலவியிருந்திருக்கவேண்டும். அக்கால மக்கள் தங்கள் வாழ்வுக்கும் வளச் செழிப்புக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்கும் சூரியனைப் பரம்பொருளாகக் கருதி வழிபட்டு வந்திருக்க வேண்டும். மிக ஆதி காலத்தில் இயற்கை வழிபாடு மிகமுக்கியத்துவம் பெற்றிருந்ததென்றும், அவற்றுள்ளும் சூரியவழிபாட்டுக்குத் தனிச் சிறப்பிடம் இருந்ததென்றும் மானுடவியலாளர்கள் (Anthropologists) எடுத்துக்காட்டுவர். ஆதிகாலத்தில் இறைவனாகக் கருதி வழிபடுவதற்குச் சூரியனைத் தவிர வேறு எதுவும் இன்மையால், இறைவனுடைய பேரருட்செயல்களுக்குச் சூரியனே ஒப்புவமை கூறப்பட்டான். காலந்தவறாது, கடமை தவறாது நேரம் தவறாது நாள்தோறும் பிரத்தியட்சமாகக் காட்சிதரும் கண்கண்ட தெய்வமாகச் சூரியனைப் போற்றி வணங்கும்போது, அதன் வீரிய சக்தியை - உயிர்ச்சக்தியை - தெய்வீக சக்தியை வணங்குகின்றோம். இத்தகைய சக்தியினைத் தந்து அளவற்ற நன்மைகளையும் பயன்களையும் உயிரினத்துக்கு வழங்கும் சூரியனுக்குத் தைத்திருநாளில் நன்றி செலுத்துவது நன்றி மறவாத தமிழர்களின் பண்பாடாக விளங்குகின்றது.

வேளாண்மைத் தொழிலுக்கு மிகவாய்ப்பாக அமைந்த நதிக்கரையோரங்களில் உலகின் மிகப் புராதன நாகரிகங்களைத் தோற்றுவித் கிரேக்கர், உரோமர், எகிப்தியர், சுமேரியர், சீனர், பாரசீகர், தமிழர் ஆகியோர், தங்கள் வாழ்வுச் செழிப்புக்கு மூலகாரணமான சூரியனை நன்றியுடன் போற்றி வழிபடும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். சகல செல்வங்களையும் தங்களுக்கு வாரிவழங்கும் **சூரியனைக் கிரேக்கர் 'அப்போலோ' என்றும், உரோமர்கள் 'ஸீரிஸ்', என்றும் தமிழர்கள் 'ஞாயிறு' என்றும் போற்றி வழிபட்டனர்.** கி.பி ஏழாம் நூற்றாண்டில், ஆதிசங்கரர் சூரியனைத் தனிப்பெருந் தெய்வமாகப் போற்றும் "சௌர மதத்தை"த் தாபிக்குமுன்பே உலகம் முழுவதும் சூரியனைத் தெய்வமாகப் போற்றி வழிபடும் வழிபாட்டுநெறி வளர்ந்திருந்தது. இந்து மதத்திலும் சூரியனை முழுமுதற் கடவுளாகவும் பரம்பொருளாகவும் முதன்மையளித்து வழிபடும் சமயப்பிரிவு 'சௌரம்' எனப்படும். வேத, இதிகாச காலங்களில் சூரிய வழிபாடு பாரதம் முழுவதும் பரவியிருந்தது. அதுமட்டுமன்றி, தமிழகத்தில் விநாயகர் வழிபாடு ஆரம்பிக்குமுன், சூரிய வழிபாட்டுடனேயே கோயில்களில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அதன் பின்னரே மக்கள் தம் அன்றாடக் கருமங்களை ஆரம்பிப்பர். ஆரியர் வழிபாட்டிலும் அக்கினி, மித்திரன் என்ற பெயர்களால், சூரியன் குறிப்பிடப்பட்டு வழிபடப்பட்டது. உலக இயக்கத்துக்குச் சூரியனே மூலகாரணம் என்றும் ஒளிக் கடவுள் என்றும் சூரியனை வேதங்கள் போற்றித் துதிக்கின்றன. மந்திரங்களுக்கெல்லாம் தாயாகிய காயத்திரி மந்திரத்தைச் செபித்துச் சூரியனைத் தினமும் வழிபட்டால், மேலான ஞானமும் புத்திக் கூர்மையும் பெருகும் என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு. சிவனின் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாக விளங்கும் சூரிய மூர்த்தமாகவும் சிவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதாலும் ஆன்மார்த்த, பாரார்த்த பூசைகளில் முதலில் சூரியபூசை செய்யும்படி ஆகமங்கள் கூறுவதாலும் தேவர்களுக்கு உதயமாகிய உத்தராயண புண்ணிய காலத்திலே தைப்பொங்கல் கொண்டாடப்படுவதாலும் சூரியப் பொங்கலெனத் தைப்பொங்கல் சிறப்புப் பெறுகின்றது.

சங்கநூல்களான தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, கலித்தொகை, திருமுருகாற்றுப்படை போன்ற நூல்களிலும் சூரியனைப் போற்றித் துதிக்கும் பல செய்திகள் காணப்படுகின்றன. "கொடிநிலை கந்தளி வள்ளி" எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் "கொடிநிலை" என்பது, கீழ்த்திசையில் நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டலமான சூரியபகவானே என்று தொல்காப்பயித்துக்கு உரை எழுதிய இளம்பூரணர் போன்ற உரை ஆசிரியர்கள் குறிப்பிடுவர். ஆகவே ஒளிப்பிழம்பான சூரியனை, ஜோதி வடிவில் வழிபடும் ஜோதி வழிபாடு தொல்காப்பியர் காலத்துக்கும் முன்பிருந்தே தமிழகத்தில் பெருவழக்காக இருந்துள்ளது. சூரியனின் வருகை உலகில் வாழும் உயிரினங்களுக்கு உவகையளிப்பதாகவும், காலையில் கிழக்குத் திசையில் உதிக்கும் இளஞ்சூரியனை மக்கள் கைகூப்பி வழிபட்டதாகவும், வானத்தில் தோன்றி, இருளை நீக்கி, உலகத்தை என்றும் அழியாது சூரியன் காப்பதாகவும், உலகத்திற்கு பல்வகைச் செல்வங்களையும் வழங்கி ஒளிதந்து செழிக்கச்செய்து உலகைச் சூரியனே இயக்குவதாகவும், அதனாலேயே உலகத்தவரால் தெய்மாகப் போற்றப்படும் சிறப்பினைப் பெற்றது சூரியனேயெனச் சங்க நூல்கள் மிக விளக்கமாகப் பேசுகின்றன.

**"அம்கண் விசும்பின் ஆர் இருளகற்றும்**
**வெங்கதிர்ச் செல்வன்"** எனப் புறநானூறும்,

**"தயங்கு திரைப் பெருங்கடல் உலகுதொழத் தோன்றி**
**வயங்கு கதிர்விரிந்த உருகெழு மண்டிலம்"** என அகநானூறும்,

**"பலர்தொழத் தோன்றி ஏமுற விளங்கிய சுடர்"** என நற்றிணையும்

இவ்வுலகுக்குச் சூரியன் வழங்கும் பெருங்கொடைகளையும், அதனாற் பயனடையும் மக்கள் சூரியனை **'அன்'** விகுதி சேர்த்து ஆண்தெய்வமாகவே போற்றி வழிபட்டமையினையும் விதந்து குறிப்பிடுகின்றன. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை,

**"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"** என நீல மயில்மீது தெய்வப் பேரொளியாய் உலகம் உய்ய முருகன் தோன்றும் காட்சிக்கு, உலகத்து உயிர்கள் மகிழ நீலக்கடலிலிருந்து சூரியன் தோன்றும் காட்சியினை ஒப்புவமை கூறுகின்றது. திருமுருகாற்றுப்படை கூறும் இவ்வடிகளுக்கு உரையெழுதிய உரையாசிரியர் வே. **சோமசுந்தரனார், "இவ்வவுலகப் பொருள்களிலே ஒளிப்பிளம்பாகிய ஞாயிற்று மண்டலத்தே உலகை ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய இறைதொழில்கள் மூன்றும் அமைந்திருத்தலானும், இறைவனுக்கே உரிய எட்டு வடிவங்களில் ஞாயிறு மண்டிலமும் ஒன்றாதலானும் அதனினும் சிறந்துயர்ந்த உவமை இறைபொருளுக்குக் காண்டல் அரிதென்க"** எனக் கூறுவதும் சூரியனைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டமையினை உறுதிசெய்யும்.

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் தமிழ்நாட்டிலிருந்த கோயில்களைப்பற்றிக் கூறும் இடத்து **'உச்சிக் கிழான் கோட்டம்'** எனச் சூரியனுக்கிருந்த தனிக்கோயில் பற்றியும் குறிப்பிடுகின்றது. பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் தங்கள் பாசுரங்களில் சூரியனை ஆங்காங்கே போற்றியுள்ளனர்.

**"ஞாயிற்றை ஞானமூர்த்தியை நான் மறக்கிற்பேனோ"**
**"ஞாயிறான் தன்னை"** என நாவுக்கரசரும்
**"இருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று"** என மணிவாசகரும்

சிவனை ஞாயிறாகவே போற்றுகின்றனர். சூரியனைக் கலையழகு மிளிரும் தெய்வீகச் சிற்பமாகப் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் செதுக்கப்பட்டு, அக்காலக் கோயில்களில் பிரதிட்டை செய்து பூசை வழிபாடுகள் நடைபெற்றது. சோழர் காலத்தில் சூரியனுக்கென தனிக்

கோயில்களும் நிர்மாணிக்கப்பட்டு, சூரிய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சிவாலயங்களில் பரிவாரத் தெய்வங்களுக்கான சந்நிதிகளில் சூரியன் முதன்மை பெறுகின்றான். அக்கோயில்களில், சூரியனுக்கான பூசை வழிபாட்டுடனேயே மூலமூர்த்தி உட்பட ஏனைய தெய்வங்களுக்கு பூசை ஆராதனைகள் நடைபெறுவதும் சூரிய வழிபாட்டின் சிறப்பினை உணர்த்தும். பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின் சூரியன் நவக்கிரகங்களின் தலைவனாகக் கருதப்பட்டு நவக்கிரக வழிபாட்டுக்குள் அடக்கப்பட்டான். சூரியனுக்கான பல கோயில்கள் பாரதம் முழுவதும் காணப்படுவதும், மிகச்சிறப்பாக உலகப் பிரசித்திபெற்ற கலைக்கூடங்களில் ஒன்றாகக் கணிக்கப்படும் பாரதநாட்டின் 'ஒரிசா' மாநிலத்தில் உள்ள கொனறக் சூரியனார் கோயிலும் (Konarak temple - Orisa) அந்நாட்டில் சூரியவழிபாடு பெற்றிருந்த முக்கியத்துவத்தினையே விளக்குவன. இவ்விடத்தில், **பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை தமது "தமிழர் சமயவரலாறு" என்ற நூலில், "சூரியன்" என்பது வடமொழிச் சொல், "ஞாயிறு" என்ற சொல்லே தனித்தமிழ்ச்சொல், பழைய தமிழ் நூல்களில் ஞாயிறு என்ற சொல்லே பயின்று வருகின்றது. தமிழர் திருநாளென்றும் உழவர் திருநாளென்றும் போற்றப்படும் தைப்பொங்கல் இன்றும் சூரியனை நோக்கியே கொண்டாடப்படுகின்றது. ஒரு காலத்தில் தமிழ்நாட்டிலே செல்வாக்குப் பெற்றிருந்த சூரிய வழிபாட்டின் எச்சமே இன்றைய பொங்கல்விழா என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.**

இவ்வாறு இந்துசமயப் பிரிவுகளில் ஒன்றான சூரிய வழிபாட்டுடன் தைப்பொங்கற் திருநாளையும் இணைத்துக் கூறுகின்ற கருத்தியல் ஒன்று சூரியவழிபாடு தமிழ்நாட்டில் முக்கியத்துவம் பெறத்தொடங்கிய காலத்திலிருந்து நிலவிவந்தது. இருப்பினும் தைப்பொங்கல், அதற்கு அடுத்த நாளான பட்டிப்பொங்கல் ஆகிய பண்டிகைகள் கொண்டாடப்படும் மரபுவழிச் சடங்காசாரங்களை, வழிபாட்டு நடைமுறைகளை நுணுகி நோக்கின், வேளாண்மைச் சமூகத்தின் உழவுத்தொழிலுடன் பின்னிப்பிணைந்த - இயற்கையோடியைந்த - உற்பத்திச் செழிப்பினை அடிப்படையாகக் கொண்ட வழமைச் சடங்காகவே (Fertility ceremony) தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது என்பதனையே பழந்தமிழ் நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மிகப் புராதன காலத்தலிருந்தே நெல்லரிசிச் சோறு தமிழர்களின் உணவுப் பழக்கத்தில் முதன்மையிடம் பெற்றது. அதனால், அத்தானியத்தை விளைவிக்கும் வேளாண்மைத் தொழிலும் அப்போதிருந்தே அவர்களின் பிரதான தொழிலுமாயிற்று. இயற்கை அளித்துள்ள நீர்வளமான ஆறுகளும் அவ்வாறுகளைச் சூழ்ந்த வளமான நிலங்களும் உழவுத் தொழிலுக்கான நிலைக்களங்களாக மாறின. அது மட்டுமன்றி உலகவரலாற்றில் உன்னதமான திருப்புமுனைகளை உருவாக்கி, நவீனகால வரலாற்றுக்கு அடித்தளமிட்ட இடங்களாகவும் - பழம்பெரும் நாகரிகங்கள் பலவற்றைத் தோற்றுவித்த பிரதேசங்களாகவும் அவை இருந்தன என்பதும், அந்நாகரிகங்களில் வாழ்ந்த மக்களின் பிரதான தொழிலாக இருந்து உயிரினங்களைப் போஷித்த பெருஞ்சிறப்புக்கு உரியதாக விளங்கியது விவசாயமே என்பதும் அழிக்கப்படமுடியாத வரலாற்றுப் பதிவுகளாகும்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என இறைவனின் அற்புத சக்தி கூறப்படுகிறது. அதுபோலச் சூரியன் இன்றிப் பிரபஞ்சத்தின் அசைவோ அல்லது இயக்கமோ இல்லையென்று கூறும் அளவுக்குச் சூழுற்தொகுதியினை ஒழுங்கமைத்து, அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கான நிலைமையினைத் தோற்றுவித்து, பிரபஞ்சத்தை இயக்கும் சூரியன் வழங்கும் வெய்யில், மழை, காற்று, பனி, குளிர், ஈரலிப்புப் போன்ற புவியியல் நிலைமைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி, இயற்கை அளித்துள்ள முதன்மையான மூலவளமான நிலத்திலிருந்த உச்சப்பயனை அடையும் தொழிலாக வேளாண்மைத் தொழில் சிறப்புப்பெற நெல்லுற்பத்தியினைப் பெருக்கும் வேளாண்மைச் சமூகமும் தோற்றம் பெற்றது. "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என

உலகத்தவர்களுக்கு உணவளித்து உயிரோம்பும் உழவர்கள் உச்சத்தில் வைத்துப் போற்றப்பட்டனர். வையகத்துள் வாழ்வாங்கு வாழும் வழிவகைகளை வகுத்துக்கூறிய வள்ளுவரும் திருக்குறளில் "உழவு" என்றவொரு அதிகாரத்தினை அமைத்து

**"உழுவார் உலகத்தாருக் காணி அஃ்தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து"** குறள் *1032*

என்றும்,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்"** குறள் *1033*

என்றும்,
உலகமக்களின் பசியைப் போக்கி இரட்சிப்பது உழவுத்தொழிலே என்றும், அதனால் உலகம் என்ற தேருக்கு உழவன் அச்சாணி - (linch pin என்ற அந்த ஆணி இல்லாவிட்டால் தேர் ஓடாது)- போன்றவன் என்றும், உழவனை நம்பித்தான் உலகமக்கள் அனைவரும் உள்ளனர் என்றும், எத்தகைய உயர்பதவி வகிப்பவர்களையும் பணியவைத்து உழவரை உயர்த்திக் கூறுவர். இவ்வாறு உலகத்தவர்களுக்கு உணவளித்துப் பசிபோக்கும் பெரும் பணியில் நிறைவடையும் மகிழ்ச்சியில் உழவர்கள், உழவுத்தொழிலுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் உயிரோம்பும் அப்பெரும்பணிக்கு ஆதாரமாக அமைந்து உலகை வாழவைக்கும் சூரியனுக்கும் அத்தொழில் சிறக்கப் பக்கபலமாக நின்றுழைக்கும் மாடுகளுக்கும் நன்றிக்கடன் செலுத்தும் நோக்குடனும் தம்மை மகிழ்ச்சிப்படுத்தும் வகையிலும் அறுவடை விழாக்களை கொண்டாடியிருக்கவேண்டும். அத்தகைய சடங்குகளில் "தைப்பொங்கலே" தமிழர் வாழ்வுடன் நிரந்தரமாக இணைந்த ஒரு பண்பாட்டு விழாவாக இன்றும் மிகச் சிறப்பாகவும் வெகு விமரிசையாகவும் கொண்டாடப்பட்டு வருவதனை அவதானிக்கலாம். இவை பற்றிய செய்திகள் பண்டைத்தமிழர் வாழ்வியலை விவரிக்கும் சங்கநூல்களில் விவரிக்கப்படாதபோதும் உழவுத்தொழில் பற்றிய செயற்பாடுகள், வெட்டிக்கட்டப்பட்ட நெற்கதிர்க்கட்டு, வைக்கோற் குவியல், அறுவடை விழாவெனச் சில செய்திகளை ஆங்காங்கே அறியமுடிகின்றது. புறநானூறு என்ற சங்கநூலில் குறுங் கோழியூர்க்கிழார் என்ற புலவர் பாடியுள்ள செய்யுள் *22*

**"அலங்குசெந்நெற் கதிர் வேய்ந்த**
**ஆய்கரும்பின் கொடிக்கூரை**
**சாறுகொண்ட களம்போல**
**வேறுவேறு பொலிவு தோன்றக்**
**குற்றான வுலக்கையால்**
**கலிச் சும்மை வியாலங்கட்...."**

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அறுவடைவிழா சேரநாட்டிற் கொண்டாடப்பட்டுள்ளது என்பதனை விவரிக்கின்றது.

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரமும் வேளாண்மைத் தொழிலுக்கு இன்றியமையாத் தேவைகளான ஞாயிறையும் மழையையும் நூலின் ஆரம்பத்திலேயே

**"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"**

என்று போற்றுகின்றது. தானிய வளம்பெருகவேண்டுமென்ற நோக்குடன் உழவர்களாற் கொண்டாடப்பட்ட அறுவடை விழாப் பற்றிய செய்திகளையும் சிலப்பதிகாரம்

**"ஏரொடு நின்றோர் ஏர்மங்கலமும்**
**பெருஞ் செந்நெல்லின் முகவைப் பாட்டும்"** நாடுகாண் காதை *135, 137*

என உழவர் வயலில் ஏர்பூட்டி உழும்போது பாடும் ஏர்மங்கலப் பாட்டுப்பற்றியும் நெல் தூற்றும்போது பாடும் முகவைப் பாட்டுப்பற்றியும் கூறுகின்றது.

**பரிபாடல்:** பதினொராம் பாடல் "நிலம் மழை வளம் பெற்றுக் குளிர்வதாகுக" என்று கூறிக் கன்னிப்பெண்கள் "அம்பா ஆடலை" மேற்கொண்டனர் என்றும்,

**கலித்தொகை:** "வையையிற் றவர்நாப் பண்வகையணிப் பொலிந்துநீ தையினீராடிய..... இத்தைத்திங்கள் தண்கயம் படியும் பெருந்தோட் குறுமகள்" என்றும்,

**பிங்கல நிகண்டு:** ஐந்துமுதல் ஒன்பது வயதுவரையுள்ள பெண்கள் "பனிநீர் தோய்வர்" (இது மார்கழி நீராடலையே குறிக்கும் என்பது அறிஞர் துணிபு) என்றும்,

**மணிவாசகர்:** "முன்னியவள்..... என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என்றும்,

**ஆண்டாள்:** "நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஓங்கும் பெருஞ் செந்நெல்......வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்தே லோரெம்பாவை" என்றும் கூறப்பட்டுள்ள பகுதிகளை நுணுகி நோக்கும்போது, பயிர், தானிய வளத்தை நோக்கிச் செய்யப்பட்ட வளமைச்சடங்கான தைப்பொங்கலுக்குமுன் மார்கழி மாதத்தில் மணமாகாத கன்னிப் பெண்களால் நோற்கப்பட்டனவாக மேற்கூறப்பட்ட சங்க நூல்களான பரிபாடல் கலித்தொகை பிங்கல நிகண்டு ஆகியனவும் பல்லவர் காலப் பத்திப் பாசுரங்களான திருவெம்பாவை திருப்பாவை ஆகியனவும் குறிப்பிடும் அம்பா ஆடல், தைநீராடல், மார்கழி நீராடல், பாவை நோன்பு ஆகிய வழிபாடுகள் அனைத்துமே வளமைச் சடங்குகளே என்றும் இவற்றின் தொடர்ச்சியான நிறைவான பண்டிகையே தைப்பொங்கல் என்றும் கூறலாம். மழைவளம் பெருகி நாடு செழித்தோங்கவும், தமக்கு வரப்போகும் கணவர் நல்வராக அமையவேண்டும் எனவும் இரு நோக்கங்களுக்காக நோற்கப்பட்ட பாவை நோன்பில், மிகக் குறிப்பாக ஆண்டாள், "திங்கள் மும்மாரி பெய்து ஓங்கும் பெருஞ் செந்நெல்" எனக் கூறுவதன் ஊடாக மழை பெய்து தானிய வளம் பெருகவேண்டுமென்ற சிறப்பான நோக்குடனேயே பாவை நோன்பும் மார்கழி நீராடலும் நிகழ்த்தப்பட்டதாகத் திருப்பாவைப்பாடலில் ஐயத்துக்கிடமின்றித் திட்டவட்டமாகக் கூறுவதும் மேற்குறித்த நோன்புகள், வழிபாடுகள் யாவும் வளமைச் சடங்குகளே என்ற கருத்துக்கு வலுச்சேர்க்கின்றன. வேளாண்மை வளத்தைநோக்கிச் செய்யப்பட்ட ஒரு சடங்கே தைப்பொங்கற் பண்டிகையாதலால் அறுவடை நிறைவடைந்ததும் சூரியனுக்குப் புதிய நெல்லரிசியில் பொங்கிப் படைத்து வழிபடுவர். **முனைவர் பா இறையரசன், "தமிழர் நாகரீக வரலாறு" என்றநூலில், "வேளாண்மைச் சடங்கு எனப்படும் தைப்பொங்கல் நான்கு நாள்கள் கொண்டாடப்படும். தைமாத அறுவடை விழாவாகிய இப்பொங்கலின்போது உழவுத்தொழிலுக்கு உதவிய மழைக்கடவுளாகிய இந்திரன், சூரியன், மாடு, பெண்கள் ஆகியோருக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. மார்கழிமாத இறுதிநாள் 'போகிப்பொங்கல்' என்று இந்திரனுக்கும், தை முதலாம் நாள் 'பெரும் பொங்கல்' என்று சூரியனுக்கும், தை இரண்டாம் நாள் 'மாட்டுப் பொங்கல்' என்று மாடுகளுக்கும், தை மூன்றாம் நாள் உழவுக்குதவிய கன்னிப் பெண்களுக்கு என்றும் கொண்டாடுவர்" என்று கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.**

தமிழர் வாழ்வில் வைதிக மரபுகள் கலந்து அவர்தம் சமய, சமூக, பண்பாட்டு வாழ்க்கைப் போக்கில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய திருப்பங்களை ஏற்படுத்தின. இருந்தும், தைப்பொங்கல் போன்ற தமிழர் திருநாள்கள் முழுக்க முழுக்க வைதிக நெறிப்படாது மரபுசார்ந்த ஒரு நிகழ்வாக தமிழர் பண்பாட்டுத் தனித்துவத்தினைப் பிரதிபலிக்கும் தமிழ்ப் பெருநாளாகவே இன்றும் கொண்டாடப்பட்டு வருவதனை, அப்பண்டிகையின்போது நிகழ்த்தப்படும் சடங்காசாரங்கள் ஊடாக உணரலாம். மிகக் குறிப்பாகப் பொங்கற் பணடிகையில் பொங்குமிடமான வீட்டு முற்றத்தில்

பசுஞ்சாணத்தினால் மெழுகி, அரிசி மாவினாற் கோலமிட்டு மாவிலை, தோரணம், வாழை ஆகியவற்றால் அலங்கரித்து மண்ணிற் செய்த அடுப்பில், மண்பானையில் நீர்நிறைத்து, வளத்தில் ஒன்றான பசுவின் பால், வயலில் விளைந்து புதிதாக அறுவடை செய்யப்பட்ட நெல்லரிசி, வயலில் உற்பத்தியான பாசிப்பயறு, வயலிலும் வீட்டிலும் விளைந்த முக்கனிகள் என எல்லாம் இயற்கைவளம் அளித்த கொடைகளைக்கொண்டே பொங்கிச் சூரியனுக்கும் பட்டிகளுக்கும் படைத்துப் "பொங்கலோ பொங்கல்" என உரக்க உச்சரித்து மகிழ்ச்சியின் உச்சத்துக்குச் சென்று இன்றும் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. இதனை நோக்கும்போது தமிழரின் சீவனோபாயத் தொழிலான வேளாண்மைச் செயற்பாடுகளுடன் இரண்டற இணைந்த இயற்கை வளங்களுக்கு மதிப்பளிக்கும், வளம்பெருக்கும் சடங்காகவே தைப்பொங்கல் கொண்டாடப்பட்டு வருவதனை உணரமுடியும். இப்பொங்கல் விழாவினை நற்றிணை போன்ற சங்ககால நூல்கள் புதிதுண்ணல் எனச் சிறப்பித்துப் பேசுகின்றன.

"இயற்கை தமக்கு உதவவேண்டுமாயின் தாமும் இயற்கைபோல் நடக்கவேண்டும். நாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் செய்யும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நிகழ்த்தப்படும் சடங்குகள் வளமைச் சடங்குகள் எனப்படும்" என்ற கருத்தியலின் அடிப்படையில் சூரியன், நிலம், மழை, வெயில், காற்றுப் போன்ற இயற்கை வழங்கியுள்ள வளங்களால் உச்சப்பயன் பெறும் மனித இனம் தமக்கென ஒரு பண்பாட்டுத் தளத்தை உருவாக்கிக்கொண்டு உயர்வதற்கும் தமக்குள் ஆழப்பதிந்துள்ள வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து ஒன்றுசேர்ந்து மகிழ்வாக வாழ்வதற்கும், மற்றவர்களை வாழ்த்துவதையும் வாழவைப்பதையும் தலையாய நோக்கமாக் கொண்டவையே தைப்பொங்கல் போன்ற பண்டிகைகளும் விழாக்களும் ஆகும் என்று கூறின் மிகையில்லை.

# பட்ட மரம் துளிர்த்த அற்புதம்

மந்திரங்களுக்கு வலுவான சக்தியுண்டு. மந்திரங்களின் பொருளுக்கு மேலாக, ஒலியி-லேதான் சக்தி இருக்கிறது. எழுதிப் படிப்பதனால் ஒலி சரியாக அமையாது. அதனால்தான் வேத மந்திரங்களை எழுதிப் படிப்பதிலலை. குரு மூலம் ஓதக் கேட்டுக் கேட்டு, மாணவர்கள் ஓதி ஓதிப் பயின்ற சப்தந்தான் சரியாய்ப் பலன் கொடுக்கும். மந்திரங்கள் மூலம் விஷக்கடிநோயைத் தீர்க்கலாம். மழை பெய்யப்பண்ணலாம். சிலவேளைகளில் சித்தி கிடைப்பதில்லை. அதற்குக் காரணமும் காஞ்சிப்பெரியவர் சொல்கிறார். நோயாளி ஒருவன் பத்தியத்தைக் கடைப்பிடிக்காமல் நோய் குணமாகாமல் இருந்தால், மருந்து பிழை என்று சொல்லலாமா? ஒவ்வொரு கிரியைக்கும் ஆசாரியர்களுக்கு 'பத்தியம்' மாதிரிக் கட்டுப்பாடு உண்டு. பெரியவரின் உரையைக் கேட்போம். 'வருணஜபம்' பலிக்காத இடங்களில் நான் விசாரித்ததில் 'அலவணநியமம்' - அதாவது ஜபம் செய்கிறவர்கள், உப்பே சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கிற விதி- சரியாக அநுஷ்டிக்கப்படவில்லை என்று தெரிந்து கோண்டிருக்கிறேன்.
'மந்திர மகிமையால் பட்டமரம் கூடத் துளிர்க்கும் என்பதைத் திருவானைக்காவில் பிரத்தியட்சமாகப் பார்த்தவர்கள் இருக்கிறார்கள்'. திருவானைக்கா தலவிருட்சமாகிய வெண்நாவல் ஒரு காலத்தில் பட்டுக்கொண்டுபோய் ஓரிடத்தில் மட்டும் (அடிமரம் என்று நினைக்கிறேன்) பட்டை கொஞ்சம் பச்சையாய் இருந்தது. அதே நேரம் கானாடுகாத்தான் செட்டியார்கள் கோயில் திருப்பணி செய்ய வந்தார்கள். தலவிருட்சத்தின் நிலையைப் பார்த்து சிவாசாரியர்களுடன் ஆராய்ந்து "ஏகாதச ருத்ராபிஷேகம்" செய்தார்கள். மந்திர சக்தியால் அப்பொழுதே அது தளிர்த்தது. பின் மரம் பழைய நிலைக்கு வந்துவிட்டது.

**'வேத நெறி தழைத்தோங்குக'**

**காஞ்சிப் பெரியவர் அருளுரையிலிருந்து தகவல்: இடைக்காடு சயம்பு**

# தையொன்று பிறந்தது மீண்டும்

திருமதி தர்ஷினி வாகீசன்

தையொன்று பிறந்தது மீண்டும் – இத்
தரணியின் வாழ்வில் மாற்றங்கள் வேண்டி.

பொங்கிடும் இன்பம் எங்கும் பெருகிட
புத்தொளி பெற்று நம் வாழ்வு சிறப்புற
பொங்கல் திருநாள் பெருமை பரவிட
பழையன கழிந்து புதியன புகுந்திட

(தையொன்று பிறந்தது––)

மேதைகள் வாழ்வினில் சாதனை புரியவும்
பேதைகள் வாழ்வில் பெருமைகள் அடையவும்
கோதையர் வாழ்வின் கொடுமைகள் அகலவும்
வாதைகள் நீங்கி வாழ்வு சிறக்கவும்

(தையொன்று பிறந்தது––)

வல்லான் வகுத்ததே நீதி' – என்ற
பொல்லாத உரைகள் தீக்கிரையாகவும்
இல்லாரை வல்லார் இனியும் இப்பூமியில்
பொல்லாங்கு செய்யும் கொடுமைகள் அகலவும்

(தையொன்று பிறந்தது––)

பல்லுயிர் ஓம்பி பகுத்துண்ட தமிழன்
பாரினில் சிறப்புடன் மீண்டும் நிமிர்ந்திட
இல்லாமை என்கின்ற பொல்லாத கொடுமை
இல்லாமல் போகும் காலம் வந்திட

(தையொன்று பிறந்தது––)

# கந்தனுக்குரிய விரதங்கள்

## கந்தபுராணச் சிந்தனைகள்

Dr சிவலோகநாதன்

விரதங்களாவன நாம் மனம், மெய் இரண்டையும் அடக்கிச் சிந்தனையை இறைவன் பாற் செலுத்தி, இவ்வுலகத்தில் விரும்பிய பொருளை அடையும் மார்க்கங்களாகும். அவை "இன்ன அறம் செய்வல்" எனவும் "இன்ன பாவம் விலவல்" எனவும் தம்முடைய ஆற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன என்று பரிமேலழகர் கூறுகிறார். விரதங்களாவது யாது எனச் சைவ வினா விடையிலே சொல்லப் புகுந்த நாவலர், **"மனம் பொறி வழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விட்டேனும் சுருக்கியேனும், மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுதல்"** என்கிறார். இவ்வாறாக வாழ்க்கையில் விரும்பிய பொருளை அடையும் மார்க்கமான மூன்று விரதங்களை முருகப் பெருமானுக்கு உகந்தவையாகக் கந்தபுராணம் சொல்கிறது. இதன் மூலம் அறவழியில் நின்று இவ்வுலக வாழ்வை நுகரும் ஒரு சைவத்தமிழ்க் கலாசாரத்தைக் கந்த புராணம் சொல்கிறது. இனி இந்த மூன்று விரதங்களையும் பார்ப்போம்.

**வெள்ளிக்கிழமை விரதம்:**

முன்னொரு காலத்திலே, முசுகுந்தன் என்ற பெருமன்னன் வசிட்ட முனிவரிடம் முருகப்பெருமானின் விரதங்கள் அனைத்தையும் உபதேசிக்கும்படி கேட்ட போது, அவர் சொன்ன அறிவுரையாக வெள்ளிக்கிழமை விரதம் சொல்லப்படுகிறது. "சிறப்பால் மேம்பட்ட ஞாயிறு முதலான ஏழுவாரங்களுள், சுக்கிரவார விரதம் (வெள்ளிக்கிழமை விரதம்) தேவர் உலகத்தைப் பாதுகாத்தருளிய கந்தவேளின் விரதமாகும். அச்சுக்கிரவார விரதத்தை மேற்கொண்ட மேலோர்கள், தம் உள்ளத்தில் எண்ணியவை யாவும் நிறைவேறும்." என்று கந்தபுராணம் சொல்கிறது.

**எள்ளரும் சிறப்பின் மிக்க எழுவகை வாரந்தன்னுள்**
**வெள்ளிநாள் விரதந்தானே விண்ணவர் உலகங் காத்த**
**வள்ளல்தன் விரதமாகும், மற்றது புரிந்த மேலோர்**
**உள்ளமேல் நினைந்த வெல்லாம் ஒல்லையின் முடியும் அன்றே.**

கந்த விரதப் படலம்: 3

"இந்த விரதம் ஐப்பசி மாத வெள்ளிக்கிழமையில் ஆரம்பிக்கப்படும். மூன்று வருட காலம் அநுஷ்டித்த பின், விரத உத்யாவனம் செய்யலாம். உபவாசம் இருத்தல் உத்தமம். அது முடியாதவர்கள் பால், பழமாவது, பலகாரமாவது இரவில் உட்கொள்ளலாம். அதுவும் முடியாதவர்கள் பகலிலே ஒரு நேரம் உண்ணலாம்" என்று அந்தணப் பெருமக்கள் சொல்வார்கள்.

**கார்த்திகை விரதம்:**

ஒரு சமயம் நாரத முனிவர் சப்தரிஷிகளிலே மேம்பட்டவராக வர விரும்பினார். அதற்கான நன்மை தரக்கூடிய விரதத்தைத் தனக்கு உரைத்தருளும்படி விநாயகப் பெருமானை வணங்கி வேண்டினார். சிவனுடைய மூத்த குமாரரான விநாயகப் பெருமான், முழுமையான அருள் செய்து நாரதரைப் பார்த்து "பெருமையுடைய ஆறுமுகங்களையுடைய நம்பியான கந்தனின் அழகிய அடிகளை வழிபட்டு நிகரில்லாத கார்த்திகை நட்சத்திர விரதத்தைப் பன்னிரண்டு ஆண்டுகள் அளவும் அன்புடனே மேற்கொள்வாயாக. அதனால் நீ விரும்பியதை நிச்சயமாகப் பெறுவாய்" என்றார்.

**முன்னவன் அதனைக் கேளா முழுதருள் புரிந்து நோக்கி**
**அன்னதுபெறுதி திண்ணம் ஆறுமா முகத்து நம்பி**
**பொன்னடி வழிபாடாற்றிப் பொருவில்கார்த் திகைநாள் நோன்பைப்**
**பன்னிரு வருடம் காறும் பரிவுடன் புரிதி என்றான்.**

கந்த விரதப் படலம்: *10*

நாரத முனிவரும் அவ்வாறே செய்து சப்தரிஷிகளின் தலைமைப் பேற்றைப் பெற்றார். "கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் இருந்து இவ் விரதம் அநுஷ்டிக்கப்படல் வேண்டும். இங்கேயும் உபவாசம் இருத்தல் உத்தமம். அது முடியாதவர்கள் பால், பழமாவது, பலகாரமாவது இரவில் உட்கொள்ளலாம். அதுவும் முடியாதவர்கள் பகலிலே ஒரு நேரம் உண்ணலாம்" என்று அந்தணப் பெருமக்கள் சொல்வார்கள்.

**கந்தசஷ்டி விரதம்:**

முருகப் பெருமானுக்குரிய ஒப்பற்றதான நோன்பாகக் கந்தசஷ்டி விரதம் விவரிக்கப்படுகிறது. முனிவர்களும் தேவர்களும் ஐப்பசி மாதத்தில் சுக்கில பட்சத்தில் முதல் நாளான பிரதமை முதலாகச் சஷ்டி இறுதியாக உள்ள ஆறு நாள்களும் காலையில் முழுகி, இரண்டு ஆடைகள் உடுத்தி, சந்தி தோறும் செய்யக்கூடிய கடன்களைச் செய்து, இரவில் தம்பம், விம்பம், கும்பம் என்னும் மூன்றிலும் முருகப் பெருமானுக்குச் சிறப்பாகப் பூசை செய்து பாரணம் பண்ணினர். இந்த விரதத்தால் அசுரர்கள் தம்மிடமிருந்து பறித்துக் கொண்ட தத்தம் பதத்தின் தலைமையை மீண்டும் பெற்றனர்.

**ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்**
**சீரணி முருக வேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்**
**பாரணம் விதியிற் செய்தார் பயிற்றுமிவ் விரதந் தன்னால்**
**தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.**

கந்த விரதப் படலம்: *23*

பாரம்பரிய முறைப்படி, முருக பக்தர்கள் கந்தசஷ்டி விரதத்தை ஒரு கடுந் தவமாகவே கருதி ஆறு நாள்களும் முழப் பட்டினியாக உபவாசம் இருத்தல் வழக்கம். முதல் நாள் அமாவாசை அன்றே ஒரு நேர உணவுண்டு விரதமாக இருந்து, அடுத்த நாள் உபவாசத்திற்கு தயார் செய்துகொள்வர். பிரதமையில் அன்று அதிகாலையில் நீராடி, தூய ஆடையணிந்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து, முருகன் ஆலயம் சென்று அங்கேயே ஆறு நாள்களும் அன்ன ஆகாரங்கள் எதுவுமின்றி இறை வழிபாடு, முருகநாம பஜனை, புராண படனம், நாம ஜபம், புராணங் கேட்டல் என்று இத்தகைய புனித காரியங்களைச் செய்து, அங்கேயே தங்கி இருப்பர். ஆலயங்களில் ஆரம்பத்திலேயே தர்ப்பை அணிந்து காப்புக் கட்டிச் சங்கற்பித்து ஆறு நாளும் நோன்பிருத்தல் முறை. இறுதி நாளில் காப்பை அவிழ்த்துத் தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தக்ஷிணைகளுடன் அர்ச்சகரிடம் ஒப்படைக்க வேண்டும். ஏழாம் நாள் அதிகாலையில் நீராடி, நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றிப் பாரணைப் பூசையைக் கண்டு வழிபட்ட பின் மாகேஸ்வர பூஜை செய்து பாரணை பண்ண வேண்டும். இவ்விதம் கடும் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் "முதல் ஐந்து நாள்களும் இரவு ஒரு போது பால், பழம் அல்லது பலகாரம் உண்டு, ஆறாம் நாள் உபவாசம் இருக்கலம். அதுவும் முடியாதவர்கள், முதல் ஐந்து நாள்களும் பகல் ஒருபோது உண்டு ஆறாம் நாள் இரவு பால் பழம் அல்லது பலகாரம் உண்டு விரதம் இருக்கலாம்." என்று அந்தணப் பெரியோர் கூறுவர்.

இவ்விரதம் ஆறு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் வரை கைக்கொள்ளப்படல் வேண்டும். உணவு முறை இவ்வாறு ஆறு வருடங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கற்ப பூர்வமாக ஆரம்பித்து ஆறு வருட முடிவில் விரதத்தைத் தொடங்கும் போது, விரும்பிய பலன்கள் கிடைக்க வேண்டும். அத்தோடு அந்தணர்களுக்கும் வேட்டி, சால்வை, அரிசி,

காய்கறி என்பன தானமாக வழங்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணத்திலே கந்த சஷ்டி விரதத்தை அனுஷ்டிப்பவர் பலபேர். இந்த ஆறு நாள்களும் அவர்கள் தவறாமல் கோயிலுக்குப் போய் வருவர். அங்கு சூரபன்மன் வதைப்படலம் படித்துப் பயன் சொல்லப்படும். அத்தோடு சூரபன்மன் வதைப்படலம் படித்தால் வீட்டில் நல்ல காரியங்கள் நடைபெறுமென்ற நம்பிக்கையும் நிலவுகிறது. இவற்றைக் கந்தபுராணம் விவரிக்கும் கந்த சஷ்டி விரதத்தோடு ஒப்பு நோக்கும் போது "சூரன் மிகப் பெரிய தவம் செய்து சிவபெருமானுடைய அருளைப் பெற்றவன். அவன் ஆணவத்தினால் கிளையோடு அழிந்த கதை தான் சூரபன்மன் வதைப்படலம். இதை, விரதமிருந்து, முருக வழிபாடு செய்து வருகின்ற நேரத்திலே கேட்பதனால் ஆணவ மலநீக்கம் இலகுவாகிறது" என்ற தத்துவம் விளங்குகிறது.

# சிதறுகாய் கேட்ட பிள்ளையார்

'சைவரும் வைணவரும் காலையில் எழுந்ததுமே முதற்கண் குட்டிக் கும்பிட்டுகொண்டே கருமங்களைத் தொடங்குவார்கள். விக்கினங்கள் ஏற்படாமல் விநாயகர் காப்பார் என்ற பலமான நம்பிக்கை. "காஞ்சிப் பெரியவர்" என்று பயபக்தியோடு அழைக்கப்பட்ட ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகளின் அநுபவத்தில் இரண்டு நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்.

இராமேசுவரத்தில் அமைத்த மண்டபத்தில் ஆதி சங்கராசாரியாரின் சிலையையும் அவருடைய நான்கு சீடர்களின் சிலைகளையும் நிறுவ, காஞ்சிபுரத்தலிருந்து இராமேசுவரம் நோக்கி ஒரு பாரஊர்தியில் அச்சிலைகளை ஏற்றி அனுப்பினார்கள். சுகமே ஓடிக்கொண்டிருந்த ஊர்தி அச்சிறுபாக்கம் என்ற ஊர் வந்ததும் பழுதாகிவிட்டது. திரிபுர தகனத்துக்கு ஓட்டிய தேர் அச்சிறுபாக்கத்தில்தான் அச்சு முரிந்ததாகப் புராணம் கூறும். இது பிள்ளையாருடைய திருவிளையாடல் என்றும் சொல்லப்படும். புராணம் நினைவுக்கு வரவும் நூற்றியெட்டுத் தேங்காய்கள் சிதற உடைத்துப் பழுது திருத்திப் பின் வேறு இடையூறு எதுவுமின்றி இராமேசுவரம் போய்ச் சேர்ந்தார்கள். 1966ஆம் ஆண்டில் பெரியவரும் பட்டத்துக்கு வர இருக்கும் சின்ன சுவாமியும் வேலூர்ப்பக்கம் யாத்திரையாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். பெரியவர் பல்லக்கிலும் சின்னவர் ஆனையிலும் பயணம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள். வழியில் சேண்பாக்கம் என்ற இடத்தில் ஒரு பிள்ளையார் கோயில், அற்புதங்கள் நிறைந்த தலம். பல பிள்ளையார் சிலைகள் ஒன்றாய் கோயிலில் நிறுவிய புதுமை. பதினொரு சிலைகள் ஒன்றாக மண்ணுக்குள்ளேயிருந்து எடுக்கப்பட்டவை. எல்லாம் சுயம்பு கருங்கற் சிலைகள். முன்னாளில் மகாராஷ்டிர நாட்டு மந்திரி ஒருவர் இரவுநேரம் குதிரை வண்டியில் பாதைவழியே போய்க்கொண்டிருந்தார். திடீரென வண்டியின் அச்சு முரிந்துவிட்டது. இறங்கிப் பார்த்ததார். நிலத்தில் வண்டியின் கீழ் இரத்தக் கறையைக் கண்டார். அச்சத்துடன் இரவு அங்கு தங்கினார். கனவில் பிள்ளையார், "இந்த இடத்து மண்ணிலே சிலைகள் உள்ளன. அவற்றை எடுத்துக் கோயில் கட்டி நிறுவிவைப்பாயாக" என்று சொன்னார். துக்கோஜி என்ற அந்த மந்திரி கட்டிய கோயிலுக்கு அண்மையில் வந்ததும் அந்த இடத்தைத் தாண்டுமுன் சங்கர மடத்துப் பெரியவருக்கும் பரிவாரங்களுக்கும் தடங்கல் ஏற்பட்டது. பெரியவர் எல்லையைத் தாண்டிவிட்டார். சின்ன சுவாமி ஊர்ந்த ஆனை நகர மறுத்தது. பாகர்கள் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. இந்தக் கோயிலைப்பற்றி இவர்களுக்கு முன்னமே தெரிந்திருந்தது. பயணம் கிளம்பும்போதே நூற்றியெட்டுத் தேங்காய் சிதற உடைப்பதாக நேர்த்தி செய்திருந்தார்கள். ஆனால் மறந்துவிட்டார்கள். ஆனபடியால் அந்த இடத்தைத் தாண்டும்போது பிள்ளையார் திருவிளையாடல் செய்தார். அப்பொழுது அவர்களுக்கு சிதறுகாய் நினைவு வந்தது. நூற்றியெட்டுத் தேங்காய்களைச் சிதற உடைத்து மன்னிப்புக் கேட்டு வணங்கினார்கள். பின் சுகமே பயணித்தனர். பின் திரும்பி வந்தபோது கோயிலிலே சிறப்பாகப் பூசை முதலியன செய்து வழிபட்டார்கள். எக்காரியம் செய்ய முனையும்போதும் பிள்ளையாரை வணங்குவோம். ஒரு செலவும் இல்லாத வழிபாடு. ஐந்துமுறை குட்டிக் கும்பிட்டால் போதும்.

காஞ்சிப் பெரியவர் உரையில் இருந்து தகவல்: இடைக்காடு சயம்பு

# ஓங்காரம்

## ஜோதிர்லிங்க பயணக் கட்டுரை

**சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்**

**"நாங்கள் சென்ற யாத்திரைகளில் ஓங்காரத்தில் சாந்தியும் ஒருமைப்பாடும் ஏற்பட்ட அளவுக்கு ஏனைய தலங்களில் ஏற்படவில்லை. பல பிறப்புக்களிற் செய்த நல்வினைப் பயன் கைகூடினாலன்றி இத்தல தரிசனம் எளிதில் கிடைக்காது."**

**- வாரியாரின் வடநாட்டு யாத்திரை**

**ஐயனே அரனே என்று அரற்றினால்**
**உய்யலாம் உலகத் தவர் பேணுவர்**
**செய்ய பாதம் இரண்டும் நினையவே**
**வையம் ஆளவும் வைப்பர் ஓங்காரரே**

**தலப்பெயர்: ஓங்காரம் - மாளவம் - மாந்தாதம்**
**இறைவன்: ஓங்காரேசுவரர்**
**இறைவி: அமலேசுவரி**
**தீர்த்தம்: நர்மதா நதி**

ஓங்காரம் கர்ப்பக்கிருகம் ஓங்கார வடிவில் அமைந்து அதன் நடுவில் சிவலிங்கம் இருப்பதால் ஓங்காரம் என்ற நாமம்.

புனித நதியாகிய நர்மதா இரண்டாகப் பிரிந்து மீண்டும் ஒன்றுகூடி அதன் நடுவில் சிவலிங்கம் இருப்பதால், ஓங்கார வடிவில் தெரிவதால், ஓங்காரம் என்ற பெயர் ஏற்பட்டது. ஓங்கார நதியின் நடுவில் இருப்பதால் நதி தீவாகும். மத்தியப்பிரதேச மாநிலத்தில் உஜ்ஜயினி மாவட்டத்தில் உஜ்ஜயினிக்குத் தெற்கே 105 கி மீ தூரத்தில் மலைச் சரிவில் இத்தலம் உள்ளது.

**வரலாறு:**

வழமைபோல, தலத்திலும் பார்க்க அத் தலத்தின் வரலாறு சுவையாக இருக்கும். நர்மதா நதி அருகில் பாய்வதால் விந்தியமலை இயற்கை வளம் கொண்டு மிகமிகச் செழிப்படைந்தது. இதனால் கர்வம் கொண்டது. இதைக் கண்ட நாரதர் அங்கு சென்று, 'மாமேரு மலைபோல் பனி மூடி, சிவபெருமான் வீற்றிருக்கும் இருக்கும் இடமாய் உயரமாய் நீ இல்லையே' என்று கூறினார். இதனால் கவலையுற்ற விந்தியமலை தனது தாழ்வை நீக்க வழி கோரியது. நாரதர், சிவனை நோக்கித் தவஞ்செய்து உயர்வதற்கு வரம் கேட்கும்படி கூறினார்.

சிவபெருமான், விந்தியமலையின் தவத்தால் மகிழ்ந்து, அதன்முன் தோன்றி, "என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். மேருமலையைவிட உயரமாக இருக்கவேண்டும் எனக் கேட்டது விந்திய மலை. சிவன் வரம் கொடுத்தார், ஆனால் ஒரு எச்சரிக்கையும் கொடுத்தார். கர்வம் கொள்ள நேரிட்டால் சிவபக்தர் ஒருவரால் மீண்டும் சிறிதாக வர நேரிடும் என்று கூறி மறைந்தார்.

வரம் பெற்றதால் விந்திய மலை வளர்ந்து மேரு மலையைவிட உயர்ந்தது. பனி படர்ந்த சிகரங்கள் பல உண்டாகின. மேருமலை வளராமல் அப்படியே இருந்தது. குணத்தை எப்படி மாற்றமுடியும்? சிவனின் கிருபையால் உயர்ந்த விந்திய மலை வட பாரதத்தையும் தென் பாரதத்தையும் பிரித்து, பெருமையும் கர்வமும் கொண்டது. தலைப்பாரம் கூடியது. அதனிடத்தில் செல்வோர் யாவருக்கும் உபத்திரவம் செய்து எள்ளி நகையாடியது.

ஒருமுறை தென்னாட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அகத்திய மாமுனிவரை, அவரின் தோற்றம் கண்டு எள்ளி நகையாடியது. முனிவர் எவ்வளவோ பரிந்து கேட்டும், வழிவிட மறுத்துவிட்டது. அகத்தியர் அதனின் ஆணவத்தையும் கர்வத்தையும் கண்டு மிகவும் சீற்றமடைந்தார். தனது கமண்டலத்தில் இருந்த நீரை எடுத்து "சிவாயநம" என்ற மந்திரத்தை உச்சரித்து, விந்தியமலைமீது தெளித்தார். உடனே மலை முந்தைய நிலையிலும் பார்க்கக் குறுகியது.

தனது தவற்றை உணர்ந்து ஆணவம் அடங்கி அகத்தியரிடம் சரணடைந்தது. மன்னிப்புக் கேட்டுத் தன்னோடு தங்கியிருக்குமாறு வேண்டியது. அகத்தியரும் மன்னித்து அங்கே தங்கினார். விந்தியமலை கர்வம் நீங்கி, தன்னிடம் அன்பாக நடந்ததால், அகத்தியர் மனம் மகிழ்ந்து, வேண்டும் வரம் கேட்கும்படி கூறினார். விந்தியமலையும் தன்மீது சிவ பெருமான், தேவர்கள் வாழவேண்டும் என்று கோரியது. அகத்தியர் ஓம் என்ற பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்து ஓங்கார வடிவில் சக்கரம் ஒன்று தாபித்து அதன் மத்தியில் மண்ணால் சிவலிங்கம் பிரதிட்டை செய்து தவம் செய்யும்படி கூறினார். அதன்படி நர்மதா தீர்த்தம், வில்வஇலை ஆகியன கொண்டு பூசை செய்து கடும் தவம் செய்தது.

சிவபெருமான் மீண்டும் தோன்றினார். விந்தியமலை தான் வழிபட்ட மண்ணாலான லிங்கத்தில் எப்போதும் நிலைபெற்றிருந்து யாவரையும் (தன்னையும் உட்படுத்தி) ஆசீர் வதிக்கும்படி வேண்டியது. இதனால், சிவன் ஜோதியாக மாறி அந்த லிங்கத்தில் ஜோதியாக இருந்து அருள்புரிகிறார். "ஓம்" என்ற பிரணவ மந்திரஉபதேசம் பெற்றதாலோ என்னவோ ஓங்காரேசுவரராகப் பெயர்பெற்று ஓங்காரத் தலத்தில் குடிகொண்டுள்ளார்.

**பிரயாணம்:**

உஜ்ஜயினில் மகாகாளீஸ்வரரை தரிசித்து இரவு தங்கி, மறுநாட் காலை 7.30 மணிக்கு ஓங்காரம் சென்றோம். வழியில் ஒரே காட்டுப் பிரதேசம். வெயிலும் அகோரமாகத் தகித்தது. ஓங்காரத்தை 2 மணியளவில் சென்றடைந்தோம்.

நர்மதா நதிக்கு மேலாகவுள்ள பாலத்தில் நடந்து சென்று ஆலயத்தை நோக்கிச் சென்றோம். முதலில் நர்மதா நதிக்குச் செல்வதற்காக மேலிருந்து கீழே இறங்கினோம். அந்த நதியில் சிலர் படகில் செல்வதைக் கண்டோம். சிலர் நீராடுவதையும் நீராடியபின்னர் தூப, தீபம் காட்டி வழிபடுவதையும் பார்த்தோம். மனைவியும் நானும் நர்மதா நதியின் நீரை எடுத்து தலையில் தெளித்து வணங்கினோம். நதியோரத்தில் வழவழப்பான, கரடுமுரடற்ற கற்களைக் கண்டோம். சிலவற்றைச் சிவலிங்கமாகப் பாவித்துக் கையில் எடுத்தோம். நர்மதா நதியிலுள்ள கற்கள் விசேடமானவை என்று முன்னர் அறிந்துள்ளேன். சிறிய உருளைக்கிழங்கை ஒத்த தோற்றத்தை அவை கொண்டிருந்தன.

கீழே இருந்து பார்க்கும்போது ஓம்காரேசுவரர் கோயில் மலைச்சரிவில் மிகப் பிரமாண்டமாகக் காட்சியளிக்கிறது. மூன்று மாடிகொண்ட திருத்தலம் அது. முதலாவது மாடியில் ஓங்கா ரேசுவரர் இருந்து அருள்பாலிக்கிறார். கோயிலை அடைய, நாங்கள் கீழிருந்து சில படிக்கட்டுக்களில் ஏறினோம். விநாயகரை வணங்கிவிட்டு, மூலவரை வணங்கச் சென்றோம். ஜோதிலிங்கமாகிய இறைவர் சிறு சிவலிங்கமாக ஒரு பள்ளத்தில் இருக்கிறார். இருக்கும் இடம் ஓம் என்ற வடிவத்தில் உள்ளது. நன்றாகவே தரிசிக்க முடிந்தது.

இத்தலத்தைச் சுற்றி வரும்போது பின்புறத்தில் ஒரு சிறு கோயிலைக் கண்டோம். உற்றுப் பார்த்தபோது அவர்தான் சனீச்சரன் என்று தெரிந்தது. அன்று புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமையாகும். இப் புண்ணிய பூமியில், புனித நதிக்கரையில் பகவானைக்கண்டதில் பெருமகிழ்ச்சிகொண்டோம். மனதார, ஆசைதீர வணங்கினோம்.

இரண்டாவது மாடிக்குச் செல்லப் படிக் கட்டுக்கள் வலப்புறமாக உள்ளன. இங்கு மகாகாளலிங்கம் இருக்கும் கர்ப்பக்கிருகம் உள்ளது. இதற்கு எதிரிலே புதிய மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தில் இராமரின் மூதாதையர் வழிபட்ட லிங்கமும் மாந்தாத்தா சிலையும் உள்ளன. இப்புதிய மண்டபத்தில் மக்கள் இருந்து இளைப்பாற வசதியுண்டு.

மூன்றாவது மாடியில் சித்தீசுவர லிங்கம் இருக்கிறது. மிகச்சிறிய மூலத்தானத்தில் இந்த லிங்கம் உள்ளது. இந்த இடத்திலிருந்து ஆலயத்தையும் நர்மதா ஆற்றையும் பாலத்தையும் தீர்த்தமாடும் இடத்தையும்

தரிசிக்கும்போது நம்மையும் அறியாமல் ஒரு பக்தி தோன்றும்.

இப்புண்ணிய தலத்தில் பரிவார மூர்த்திகளாக மகாகாளர், பஞ்சமுக கணபதி,லட்சுமி நாரா யணர் மூர்த்தங்கள் உள்ளன.

“ஒரு முறைதான் வரும்” என்றாற்போல இத் தலங்களை மறுமுறை தரிசிக்கச் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. அதனால் சற்று ஆறி அமர்ந்து மீண்டுமொருமுறை தரிசித்து தொழுது மனமகிழ வழிபட்டோம்.

இதன்பின்னர் தென்திசையில் மிக அருகிலுள்ள அமலேசுவரம் ஆலயம் சென்றோம் இறைவர் அமலேசுவரர் - லிங்கவடிவம். இக்கோயில் பழுதடைந்து சீரழிந்த நிலையில் உள்ளது. வழிபட வருவோரும் குறைவு. இங்கும் பஞ்சமுக விநாயகர் மூர்த்தமும் வேறு சிறு கோயில்களும் உண்டு. இக்கோயிலையும் ஜோதிலிங்கக் கோயிலாகவே கருதுகின்றனர்.

**பிரயாணத்துக்கு ஏற்ற காலம்:**
ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்கள் ஏற்றவை. ஆண்டு முழுவதும் போகலாம் என்றாலும் மழைகாலம் வெய்யிற் காலங்களைத் தவிர்ப்பது நல்லது.

இத்தலத்தை புகைரதம், பஸ், விமானம், படகு மூலம் சென்று தரிசிக்கலாம். உஜ்ஜயினிக்குச் செல்லும் புகைரதத்தில் ஏறி ஓம்கார ரோடு ரயில் நிலையத்தில் இறங்கி பஸ், வாடகைக் கார் அல்லது ஓட்டோ மூலம் செல்லாம். பேருந்து சேவை நன்றாகவுள்ளது. சமீபமான விமான நிலையம் இந்தூர். நர்மதா நதி மிக ஆழமானது. படகில் செல்லலாம்.

**நர்மதா நதி:**
நர்மதா ஏழு புண்ணிய நதிகளுள் ஒன்றாகும். இந்த ஏழு நதிகளுள் நர்மதா நதியைத் தவிர மற்றைய நதிகள் பெண் நதிகள் என்றும் நர்மதா ஆண் நதியென்றும் கருதப்படுகிறது. அதன் நீளம் 1290கிமீ. மைகான் மலைத்தொடரில் அமர்கண்ட் சிகரத்தில் பிறந்து விந்தியசாகபூரா மலைகளுக்கிடையில் சென்று நர்மதா மாவட்டம் வழியாக அரபிக் கடலில் சங்கமமாகிறது. மேற்கு நோக்கிச் செல்லும் நதிகளுள் இது பெரியது. இந்தியாவிலேயே தோன்றி இந்தியாவிலேயே முடியும் நதிகளில் இது மூன்றாவதாகும். கோதாவரி, கிருஷ்ணா நதிகள் முறையே முதலாம் இரண்டாம் இடத்தைப் பிடிக்கின்றன.

தென்னாட்டில் கிரிவலம் வருவதுபோல, நர்மதா நதியை வலம்வருவதும் மிகப் பிரபலமானது. புனித நதி என்பதால் காலணிகள் அணியாது வலம்வரவேண்டும். பணம் கொண்டு செல்லாமல் பிச்சை எடுத்தபடியே வலம் வரவேண்டுமாம். நாங்கள் காரில் கிரிவலம் வருவதுபோல இங்கே படகில் நதிவலம் வருகின்றனர்.

**செவிவழிச் செய்தி:**
கங்கை நதியில் பல கோடி மக்கள் நீராடிப் பாவவிமோசனம் பெற்றதால் கங்கை தன் புனிதத்தை இழந்து பாவமூட்டையைச் சுமந்ததாம். அதனால் கங்கை ஒரு கறுத்த பசுவாக உருவெடுத்து வந்து நர்மதா நதியில் நீராடித் தன் பாவங்களைத் தீர்த்ததாம். இதனால் புராணங்கள் கங்கையை விட நர்மதா நதியையே விசேடமாகக் கருதுகின்றன.

**நர்மதா நதிக் கற்கள்:**
இவை மிகப் பிரசித்தி பெற்றவை. இவை களைச் சிவனின் அம்சமாக மதிக்கின்றனர். சிவலிங்கம் போன்ற உருவுடைய கற்களை வனலிங்கம், வளசிலிங்கம் என்று கூறுவர். சைவசமயத்தவர் இவற்றை ஆர்வமுடன் தேடி எடுத்து தினம் தினம் வழிபடுவர்.


தஞ்சாவூரில் உள்ள (தமிழ்நாடு) பிரகதீசுவரர் ஆலயம் இராஜராஜ சோழனாற் கட்டப்பெற்றது. இங்குள்ள சிவலிங்கம் மிகப் பெரியது. சிவாசாரியர் ஏணி மூலம் ஏறியே அபிஷேகம் செய்யவேண்டும். இந்த லிங்கம் ஒரு வனலிங்கம்.

இராமயணம், மகாபாரதம், கந்தபுராணம் ஆகியவற்றில் நர்மதா நதியைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**புனித தீர்த்தங்கள் - தலங்கள்:**
ஏழு புண்ணிய நதிகளில் வரும் நீர் புண்ணிய தீர்த்தங்கள். ஏழு முத்தித் தலங்கள் பன்னிரண்டு ஜோதித் தலங்கள் யாவும் புண்ணியத் தலங்களாகும். தீர்த்தத் தலங்கள் நீராட, தானம் கொடுக்க, பிதுர்க்கடன் செய்ய விசேடமானவை. புண்ணிய தலங்களில் அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி, தானம், தரிசனம், பூசை முதலியவை செய்தல் வேண்டும்.

வீட்டிலே பூசை செய்தால் ஒரு பங்கு பலனும், கோயில் தரிசனம் செய்தால் நூறு பங்கு பலனும், புனித ஆலயங்களில் வழிபாடு செய்தால் ஆயிரம் பங்கு பலனும் கிடைக்கும். அதேபோல, சாதாரண நாள்களிற் செய்யும் தானம் ஒரு பங்கு பலன் தரும். அமாவாசை, பௌர்ணமி நாள்களிற் செய்யும் தானம் நூறுபங்கு பலன் தரும். சூரிய சந்திர கிரகண நாள்களிற் செய்யும் தானம் ஆயிரம்பங்கு பலன் தரும்.

**"நீ ஆன்மிகப் பொருளுடைய கனவு ஒன்று கண்டால் அது அநுபவம்**
**அதன் பொருளை நீ உணர்ந்துகொண்டால் அது ஞானம்"** - அரவிந்தர்.



# இந்து ஆலயங்களின் ஆன்மிக அநுபவங்கள்

**சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன் அவர்கள் கலசத்தில் தாம் எழுதிய பயணக் கட்டுரைகளையும் வேறு சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றில் எழுதிய கட்டுரைகளையும் தொகுத்து ஓர் அழகிய நூலாக வெளியிட்டுள்ளார். சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இந்நூல் வெளியிடப்பட்டது. யாத்திரை செல்ல விரும்பும் பக்தர்களுக்கு இந்நூல் பயனுள்ளதாக இருக்கும். இந்த நூலின் இன்னொரு சிறப்பு, அது இலவசமாகக் கொடுக்கப்படுகின்றமை. நூலைப் பெற விரும்புவோர் நூலாசிரியரைத் தொடர்பு கொள்ளவேண்டும்.**

உலகிலுள்ள சமயங்களுள் மிகவும் தொன்மையானது சைவசமயமாகும். சைவ சமயத்தைத் தவிர்ந்த ஏனைய மதங்கள் குறிப்பிட்ட ஒருவரால், குறிப்பிட்ட காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகச் சான்றுகள் உள்ளன. ஆனால் சைவசமயம் எப்போது, யாரால் தோற்றுவிக்கப்பட்டதென்று கூற முடியாது. சைவசமயம் ஆதி, அந்தம் இல்லாதது. பரம்பொருளாகிய இறைவனும் ஆதி அந்தம் இல்லாதவர். எனவே இறைவனும் சைவமும் ஒன்றென ஆகமங்கள் கூறுகின்றன.

# சைவ சமயம்

திருமதி சுகந்தி இந்துசேகரன்

மனிதர்கள் அனைவரும் துன்பத்தை வெறுத்து, இன்பத்தை அடைய விரும்புகின்றனர். மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன. உலகிலுள்ள பொருள்கள் வழியாக அநுபவிக்கும் இன்பம் சிற்றின்பம் எனப்படும். அது அழியும் தன்மையுடையது. ஆனால், என்றென்றும் நிலைபெற்று நின்று இடையறாது அநுபவிக்கத்தக்க இன்பம் ஒன்று உண்டு. அதுவே பேரின்பம் எனப்படும். இப் பேரின்பத்தை மக்கள் அநுபவிப்பதற்காகப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்த வழியே சமயமாகும்.

சமையம் என்பதில் சமை- என்றால் இறைவனை அடைவதற்குரிய சாதனங்களை சமைப்பது (பரிபக்குவப்படுத்துவது) என்று பொருள்படும். சமயம், கண்ணால் காணப்படுகின்ற உலகத்தையும், அநுமானத்தால் அறியப்படும் ஆன்மாவையும், இறைவனையும் இனிதே காட்டுகின்ற ஞான ஒளி. மனிதனுடைய உடல் நலத்திற்கும், உள நலத்திற்கும் உதவும் ஔடதமாகும்.

அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். இப்படிப்பட்ட முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானை, அவர் அருளிச் செய்த வேதாகமங்களில் விதித்தபடி மெய்யன்போடு வழிபடுவோர் சைவ சமயிகள் என்று கூறப்படுகிறார்கள். சைவர்களாக நாம் பிறப்பதற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இதையிட்டு நாம் பெருமிதம் அடைய வேண்டும். இங்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரம் ஒன்றினையும், சிவஞானசித்தியாரில் உள்ள ஒரு பாடலையும் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

**சம்பந்தர் தேவாரம்:**

**என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து**
**முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்**
**மன்னு காவிரி சூழ்ந்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்**
**பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே**

இவ்வாறாகத் திருவலஞ்சுழியில் வீற்றிருக்கும் சிவபெருமானைப் போற்றிப் பாடுகிறார் சம்பந்தப் பெருமான்.

***சிவஞானசித்தியார் பாடல்:***

**வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி**
**தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்**
**ஊழ் பெறல் அரிது சால உயர்சிவ ஞானத்தாலே**
**போழ்இள மதியினானைப் போற்றுவார் அருள் பெற்றாரே.**

எனச் சைவர்களாக நாம் பிறப்பதற்கு எவ்வளவு அளப்பரிய சிவஞானம் பெற்றிருக்க வேண்டும் (புண்ணியம் செய்திருக்க வேண்டும்) என்பதன் பெருமை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

சைவ சமயம் நித்தியமானது. எமது சமயமாகிய சைவ சமயம் ஒன்றே மதம் என்று கூறப்படாது "சமயம்" என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

பெறுவதற்கரிய மானுடப் பிறவியை நாம் பெற்றதன் நோக்கம், இறைவனை வழிபட்டு முத்தி இன்பம் பெறுவதற்கேயாகும். இது, சைவ சமயத்தவர்களின் வாழ்வின் இலட்சியத்தை நன்கு புலப்படுத்துவதாக உள்ளது. சைவ சமயம் சிவ வழிபாட்டினைச் சிறப்பு அம்சமாகக் கொண்டது. உலகிலுள்ள சமயங்களுள் சில, அருவ வழிபாட்டினைக் கொண்டவை. அவற்றுள் சில அரு உருவ வழிபாட்டினைக் கொண்டவை. பல உருவ வழிபாட்டினைக் கொண்டவை. ஆனால், சைவ சமயம் இம் மூவகை வழிபாட்டினையும் தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பிற்குரியது. இம் மூவகை வழிபாடுகளையும் கோயில் என்ற சிறப்பிற்குரிய சிதம்பரத்தில் காணலாம். தில்லையம்பலத்தில் திருநடனம் புரியும் கூத்தபிரான் திருமேனி உருவ வழிபாட்டினையும், இலிங்கம் அரு உருவத்தினையும், ஞான ஆகாசமாகக் காட்சியளிக்கும் சிதம்பரவெளி அருவ வழிபாட்டினையும் குறிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

எனவே எத்தனை வேறுபாடான வழிபாட்டு முறைகளைக் கொண்டவர்களும் சிதம்பர ரகசியத்தை உணரும்போது, தத்தம் உணர்வில் தோன்றும் காட்சிகளையெல்லாம் எம் மார்க்கம் இங்கு உள்ளதென எண்ணிக் கண்டு களிக்கின்றனர். இவ்வாறாக எல்லாச் சமயங்களையும் படி நிலைகளாகக் கொண்டு அவற்றுக்கெல்லாம் கலசம் போன்று விளங்கும் மேன்மையுடையது சைவ சமயம். உலகிலுள்ள மதங்களில் மகத்துவம் மிக்க சமயமாக விளங்கும் சைவ சமயம் அன்றும், இன்றும், என்றும் சுடரொளி போன்று பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.

எனவே சைவம் நீதியின்படி நாம் அறநெறி வாழ்வை வாழ்வாங்கு வாழ்வதற்கு நம்மை ஆற்றுப்படுத்துகின்றது என்றால் மிகையாகாது.

**வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்**
**பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்**
**நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று**
**பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே**

**பாதம் தொழுவது நம் கடன்; பாவம் தீர்ப்பது அவர் அருள்.**

இவ்வழியே பாவம் தீர்ப்பவராகிய சிவபெருமானை மெய்யன்போடு வணங்கி அவனருளாலே அவன்தாள் அடைவோமாக.

# சிவாகமங்களும் ஆலயவழிபாடும்

- மா இந்துசேகரம்

சிவாகமங்கள் சைவப்பண்பாட்டைப் புலப்படுத்தும் முக்கிய கருவூலங்களாகும். சிவாகமங்கள் இறைவனால் அருளப்பட்டவை. இதனை, **"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"** என்ற திருமந்திர வரி மூலமும், **"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்"** என்ற பெரியபுராண வரி மூலமும் அறியலாம். சிவனால் அருளப்பட்ட மூல சிவாகமங்கள் இருபத்தெட்டு ஆகும். இதனைத் திருமூலர் **"அஞ்சோடிருபது மூன்றுள ஆகமம்"** என்று மொழிவர். உபாகமங்கள் இரு நூற்றேழு ஆகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆகமமுறைப்படி ஆலயவழிபாடு நடை பெற்றுள்ளது என்பதைப் பெரியபுராணம், **"ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கேற்ப"** என்று கூறுவதால் அறியலாம். சிவாகமங்கள் சிவனின் சதாசிவவடிவத்தில் அதன் ஐந்து முகங்களில் இருந்து தோன்றின. இறைவன் அடியார்களுக்கு ஆகமவடிவில் வருகின்றான் என்பதை மணி வாசகர், **"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"** என்று கூறுவதால் அறியலாம். ஓர் ஆலயத்தை எப்படி? எங்கு? அமைக்க வேண்டும் என்பதையும், ஆலயத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யும் விதம் பற்றியும், சிவலிங்க வகைகள், சிவவடிவங்கள் பற்றிய விவரங்களையும் ஆகமங்கள் கூறும்.

ஆலயங்களில் நித்திய பூசை எப்போது செய்யவேண்டும் என்பதையும், ஆறு காலம் நித்திய பூஜை செய்வதால் ஏற்படும் நற்பலன் பற்றியும், பூசைபுரியும் அர்ச்சகரின் ஒழுக்கம் பற்றியும் ஆகமம் கூறும், மகோற்சவம், மகாகும்பாபிஷேகம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஆகமங்களே கூறுகின்றன. சைவவிரதங்கள், சைவவிழாக்கள் பற்றிய விவரங்கள், சிவராத்திரி விரதம். நவராத்திரி விரதம் போன்ற நாள்களில் எப்படி ஆலய வழிபாடு செய்ய வேண்டும், பிரதோஷநாள்களில் எப்படி வலம் வருதல் வேண்டும், ஆலயத்தில் ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யவேண்டும் என்பதையும் ஆகமம் கூறும். ஆலய வழிபாட்டில் இசைக்கலைக்கு முக்கியத்துவம், ஓதுவார் பற்றிய குறிப்பு நடனக்கலைக்கும் ஆகமம் கூறும் ஆலயவழிபாட்டில் முக்கியத்துவம் உண்டு. இதுவே ஆலய வழிபாட்டில் நடைபெறும் "நிருத்தோபசாரம்" ஆகும். திருக்கோயில் வழிபாட்டின் போது செய்யக்கூடாத செயல்கள் பற்றியும் ஆகமம் கூறும்.

சிவனது 25 வடிவங்களும் சதாசிவ வடிவத்தின் ஐந்து முகங்களில் இருந்தே தோன்றின என்பதை ஆகம வாயிலாக அறிகிறோம்.

சிவாகமங்களே சைவசித்தாந்த தத்துவ ஞானத்திற்கும் ஆதார மூலங்கள். சிவாக மங்களில் ஞானபாதம் சைவசித்தாந்தத்தில் முக்கிய மூலங்களாக உள்ளன. இன்று ஆலய வழிபாட்டில் ஆகமமரபுகள் பின்பற்றப்படாமை கவலைக்குரியது. சைவசமயத்தின் சிறப்பு நூல்கள் ஆகமங்கள். இவை இறைவனால் - சிவ னால் அருளிச் செய்யப்பட்டதனாற் சிவாகமங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன.

காமிகம், யோகஸம், சிந்தியம், காரணம், சுப்பிரபேதம், விஜயம், வீரம், மகுடம், விமலம், கிரணம், வாதுளம் என்பன முக்கிய ஆகமங்களாகும்.

ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலயமாகும். ஆலயம் என்ற சொல் கோயில், தேவகிருகம், தேவஸ்தானம், பிராசாதம் எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. கோயில் என்னும் சொல் கோவில் எனவும் வழங்குகின்றது. கோயிலைக் குறிக்கும் இன்னொரு சொல் ஆலயம். மக்களுக்கு மன ஒடுக்கத்தையும், அமைதியையும் தரும் இடம் - நிலையம் ஆலயமாகும்.

"பசுவினுடைய உடம்பெங்கணும் பரந்தோடும் குருதி பக்குவமடைந்து பாலாகப் பரிணமிக்கும் பொழுது அதை வெளியேற்ற அதன் முலைகள் அமைந்து விளங்குவதைப் போல உலகெங்கணும் பரந்து விளங்கும் பரமன் ஆன்ம ஈடேற்றங்கருதிக் கருணை மேலீட்டினால் உருவந்தாங்கி எழுந்தருளியிருக்குமிடம் கோயில் ஆகும்." இறைவனிடம் ஆன்மாக்களை வழிப்படுத்தல் வழிபாடாகும். இதற்கு அடிப்படை, ஆகமம். "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டா" "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" - இது மெய்கண்டதேவரின் அமுதமொழி.



உ

சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



# இந்துக் கலாசார மையம்

128, Aurelia Road, Croydon CR0 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்
## Arulmihu London Muththumari Amman Temple

### திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்
### Temple Opening Times

காலை:
08:00 AM to 01:30 PM
மாலை:
04:30 PM to 09:00 PM
செவ்வாய்க் கிழமைகளில் மட்டும்:
08:00 AM to 09:00 PM
(முழுநாளும் திறந்திருக்கும்)



### பூஜை நேரங்கள்
### Pooja Times

| | |
|---|---|
| 09.00AM | : காலைப்பூசை Morning Pooja |
| 12.00NOON | : பகற்பூசை Afternoon Pooja |
| 07.30PM | : இரவுப்பூசை Evening Pooja |
| 09.00PM | : அர்த்தசாமப்பூசை Arthajaama Pooja |

அம்பாள் அடியார்களே,

நமது அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் 06.02.2017 திங்கட்கிழமை தொடக்கம் மேற்படி முகவரியில் அபிஷேகமும் பூசைகளுகளும் அடியார்களின் தரிசனமும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேல் வாடகை இடங்களில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டு இருந்த அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் நம் அனைவரின் பிரார்த்தனையின் பலனாக நமக்கெல்லாம் வரம் தர நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான மிகப் பெரியதொரு கோவில் 128, Aurelia Road, Croydon. CR0 3BF என்ற முகவரியில் அமைய அருள்பாலித்துள்ளாள்.

முதியோர்கள், இளையோர்கள் ஒன்று கூடி உறவுகளை சந்தித்து உரையாட ஓர் இடம், தமிழ், இயல், இசை, நாடகம் வளர்க்க இடம் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய காணியை சொந்தமாக்கிக் கொள்ள திருவருள் கைகூடியுள்ளது.

பக்தப் பெருமக்கள் அனைவரும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கிவரும் ஆயிரம் கண்ணுடையாள் இலண்டன் முத்துமாரியம்மனைத் தரிசித்து எல்லா வளங்களும் பெற்று இன்பமாக வாழப் பிராத்திக்கின்றோம்.

அனைவரும் வருக அம்பாள் அருள் பெறுக!


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Quality! Variety!! Satisfaction!!!
Veena's
CASH & CARRY
Veena's at BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com



திரு.ஆறு திருமுருகன்



சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள்



திரு.க. பாலேந்திரா



திரு.ஏ.கே.ராஜகோபால்



## சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு விழா 28.10.2017




## சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர்கள்















**படங்கள்: Baba Luxy - Jaylux Digital**

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinisshinryukarate@gmail.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139

HOWEVER YOU SMILE

# SMILE WITH CONFIDENCE



Come to Bluebell for..

INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION

Book your FREE consultation today!

## Bluebell is a TOP DIAMOND STATUS Invisalign provider.

If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.



Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Diamond Status Provider, a title which is only held by a privileged few dentists in the UK.

**Bluebell®**
Dental Practice and Clinic

www.bluebelldp.co.uk

**Tel: 020 8500 6789**
140 Tomswood Hill,
Chigwell, Essex IG6 2QP

invisalign DIAMOND PROVIDER
0% FINANCE AVAILABLE
YouTube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஜனவரி(14--01-2018) தொடக்கம் மே (10-05-2018) வரை**

| | | |
|---|---|---|
| 14.01.2018 | ஞாயிறு | தைப்பொங்கல் |
| 30.01.2018 | செவ்வாய் | தைப்பூசம் |
| 13.02.2018 | செவ்வாய் | சிவராத்திரி |
| 28.02.2018 | புதன் | நடேசர் அபிஷேகம் |
| 27.03.2018 | செவ்வாய் | யோகர்சுவாமி குருபூசை |
| 30.03.2018 | வெள்ளி | பங்குனி உத்தரம் |
| 02.04.2018 | திங்கள் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| 14.04.2018 | சனி | விளம்பி வருடப்பிறப்பு |
| 29-04-2018 | ஞாயிறு | சித்திரா பௌர்ணமி |
| 07.05.2018 | திங்கள் | நடேசர் அபிஷேகம் |
| 09.05.2018 | புதன் | திருநாவுக்கரசர் குருபூசை |

ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## Membership Form

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam UK and enclose herewith cash/ cheque / Standing Order for £ ..................
Members are entitled to receive our information emails and Kalasam quarterly magazine.


| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Banked Date | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |




# ‘திருமந்திரம் ஓர் அறிமுகம்’ ஓர் அறிமுகம்

**- ஞாலக்கோன்**

திருமந்திரம் என்கின்ற யானையை இப்போது பலரும் பார்க்க ஆரம்பித்துள்ளார்கள்; படிக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு வளர்ச்சியே! ஒவ்வொருவரும் தத்தமது அறிவுக்கு ஏற்ப விளக்கங்களும், விமரிசனங்களும் கொடுக்கிறார்கள். இதை அறியும்போது யானை பார்த்த குருடர்கள் என்றொரு கதையைச் சிறுவயதிலே பள்ளிக்கூடத்தில் படித்தது நினைவுக்கு வருகிறது. ஒருவர் யானையைச் சுளகுபோல இருக்கிறதென்றும், ஒருவர் அது உலக்கைபோல இருக்கிறதென்றும், இன்னொருவர் சுவர்போல இருக்கிறதென்றும் விதம் விதமாய் விவரித்தார்கள் என்று அந்தக் கதை சொல்லும்.

இப்படியெல்லாம் இல்லாமல், திருமந்திரத்தை எப்படிப் படிக்கலாம்; படிக்கவேண்டும் என்று சொல்வதுதான் **“திருமந்திரம் ஓர் அறிமுகம்”** என்ற நூல். 146 பக்கங்கள் கொண்ட இந்த நூல் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சைவ சித்தாந்தம், இந்திய தத்துவ தரிசனங்கள், திருமந்திரம் என்பவையே அந்தப் பிரிவுகள். மொத்தமாக 47 தலைப்புக்களில் வெவ்வேறு விடயங்கள்ஆராயப்பட்டுள்ளன; அலசப்பட்டுள்ளன; விவாதிக்கப்பட்டுள்ளன; அறிவுறுத்தப் பட்டுள்ளன. இந்த நூலை எழுதியவர், “புலமைத் திலகமாகிய வழக்கறிஞர் சீர்வளர் கந்தராசாவைத் திருமந்திரமாமணி என்று அழைப்பதற்கு இவ்வறிமுக நூலே போதும்” (பக்கம் xxiii) எனப் பத்மசிறீ அவ்வை நடராசனாற் பாராட்டப்பெற்ற, நமக்கெல்லாம் இலண்டனிற் பரிசயமான, **திரு செ சிறீக்கந்தராசா அவர்கள்.**

இந்த நூலிலே நூலாசிரியர் தம் மனத்துள் எழுந்த பல கேள்விகளுக்கு விடைதேட முயன்றுள்ளமை தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. தேவார தோத்திரங்களைக் கோயில்களிலே ஓதுவது அருகிவருவது குறித்த தனது ஆசங்கையையும் தெரிவித்துள்ளார். திருக்கோயில்களிலே ஓதுவார்களை நியமித்துத் தேவார, திருவாசகத் திருமுறைகளை ஓதுகின்றாரிலையே என்ற தன் ஏக்கத்தையும் குறிப்பிட ஆசிரியர் தவறவில்லை. **தேவாரம் ஓதும் வழக்கு ஒழிந்துபோனால் அடுத்த தலைமுறை இந்தப் பொக்கிஷங்களின் பெறுமதியை உணர வாய்ப்பில்லாது போய்விடும் என்பது ஓர் மறுக்கமுடியாத உண்மை.** அதுதான் அவரின் ஏக்கத்துக்கும் காரணம்.

நூலிலே பல அத்தியாயங்களின் தலைப்புக்கள் கேள்விகளாகவே தரப்பட்டுள்ளன. “சைவ சித்தாந்தம் கூறுவதென்ன?”, “திருமந்திரம் மூலநூலா? மொழிபெயர்ப்பு நூலா?”, “திருமந்திரத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன?”, “திருமந்திரம் என்பதா? திருமந்திரமாலை என்பதா?”, “அப்பரும் சம்பந்தரும் திருமூலரை மதிக்கவில்லையா?” என்பன பதம் பார்ப்பதற்குச் சில பருக்கைகள். மந்திரம் என்றால் என்ன என்ற கேள்வியை எழுப்பி, “நினைத்ததை எய்தவைக்கின்ற சிறப்போசை என்பது பொருள்” என்று பதில் கொடுத்து (பக்கம் 38), தமிழறிஞர் அ ச ஞானசம்பந்தன் அவர் களையும் சாட்சிக்கு அழைத்திருக்கிறார் ஆசிரியர். அவர் ஒரு வழக்கறிஞர் அல்லவா? அந்த அநுபவம் கை கொடுக்கிறது.

திருமந்திரம் தோத்திரமா அல்லது சாத்திரமா என்ற கேள்விக்குத் தன் கருத்தை நாற்பத்து இரண்டாம் பக்கத்தில் **"ஒன்றை விலக்கி மற்றொன்றை விளக்க முடியாது என்பது திருமூலர் கருத்து. இதனாற்றான் அவர் வேதத்தைச் சுட்டும் வண்ணம் நூற்பெயரை மந்திரம் என்றும் ஆகமங்களைச் சுட்டும் வண்ணம் உள்ளடக்கங்களைத் தந்திரங்கள் என்றும் குறித்தார் என்று எண்ணத் தோன்றுகின்றது"** என்று பதிவு செய்துள்ளார்.

திருமந்திரம் மூலநூலா? அல்லது மொழிபெயர்ப்பு நூலா? என்ற கேள்விக்கு, விரிவாகப் பல நியாயங்களை முன்வைத்து முடிவில்,

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"**

என்ற திருமூலரின் ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து இது ஒரு மொழிபெயர்ப்பு நூலே என்று தீர்ப்பையும் வழங்கியுள்ளார். ஆனால், திருமந்திரம் மூலநூலா அல்லது வழிநூலா? என்று கேட்டுப் பதில் கொடுத்திருந்தால் மேலும் சுவையாக இருந்திருக்கும்.

**"சிவாகமத்தை விண்ணவர்களே விளங்கிக்கொள்ள முயன்றும் இயலாதுபோனார்கள்.... அப்படியான சிவ ஆகமங்களின் பிழிவான திருமந்திரத்தைச் சாதாரணர்கள் ஆகிய நாங்கள் விளங்கிக் கொள்வதும் இயலாததுதான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்"** (பக்கம் 55) என்ற ஆசிரியரின் இந்தக் குறிப்பைப் படித்தபோதுதான் இந்த நூல்பற்றிய மதிப்பீடு எழுதத் தொடங்கியபோது, மேலே நான் குறிப்பிட்ட "யானை பார்த்த குருடர்கள்" கதையை நினைவு படுத்தியதெனக் குறிப்பிட்டேன். திருமந்திரம் படித்து இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய நூலன்று.

அப்படியானால், **யாருமே திருமந்திரம் படிக்க முடியாதா? படிக்கக்கூடாதா? என்ற கேள்வி எழுவது தெரிகிறது.** அதற்கும் ஆசிரியர் அழகாகவே பதிலளித்துள்ளார்.

**காமம் வெகுளி எனத்தொடங்கும் குறள் (360), ஆரா இயற்கை எனத்தொடங்கும் குறள் (370) ஆகிய இரண்டும் சைவசித்தாந்தத்தின் பிழிவாக உள்ள குறள்கள். "திருமூலரின் திருமந்திரத்தையோ, சந்தானகுரவரின் மெய்கண்டசாத்திரங்களையோ கற்க விரும்புகின்றவர்கள், திருவள்ளுவரின், "நீத்தார் பெருமை", "மெய்யுணர்தல்", "அவா அறுத்தல்" என்ற அதிகாரங்களில் வருகின்ற குறள்களைக் கசடறக் கற்றுத் தெளியவேண்டும். அவ்வாறு கற்றபின், மெய்கண்டசாத்திரங்களின் அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்துகொண்டு திருமந்திர மாலைக்குள் புகுவது பயனுள்ள முயற்சியாக அமையும்.., "திருமந்திரத்தை ஆழமாகக் கற்க விரும்புகின்றவர்கள் அநுபூதிமான்கள் எனப்படும் வல்லார்வாய்க் கேட்டுப் பயனடைவார்களாக"** என்பன ஆசிரியரின் அறிவுறுத்தல்கள். அவை மிகவும் நியாயமானவையாகவே தெரிகின்றன.

நூலின் முதல் இரண்டு பிரிவுகளான சைவசித்தாந்தம், இந்திய தத்துவ தரிசனங்கள் ஆகியவை "ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்" என்பதுபோல, திருமந்திரத்துள் நுழைய விரும்புவோர் படிக்கவேண்டிய மூன்றாம் பிரிவுக்கு இலவச இணைப்பாக அமைந்துள்ளன. வித்துவான் வேலன் இலக்கியவட்டத்தில் உருவாகிய சிந்தனை, எழுத்துரு எடுத்து, நூல்வடிவில் "ஆலயம் வெளியீட்டகம்" கைவண்ணத்தில் வெளிவந்துள்ளது. சைவசித்தாந்தம், தரிசனங்கள், சைவ சமயத்தின் அடிப்படை போன்ற சில சாதாரண மக்களுக்குப் புரியாத சொற்களுக்கும், விடயங்களுக்கும் இந்த நூல் ஒரு கையேடு போல அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. திருமந்திரத்தைப் படிக்க விரும்புவோர் படிக்கவேண்டிய நூல் இது.



# நல்ல பண்பாளர் ஒருவரை நாம் இழந்துவிட்டோம்

சைவ முன்னேற்றச் சங்கம் மாதந்தோறும் இல்லங்களில் வழிபாடு நடத்திவந்த காலம் அது. அந்த நாள்களில் மார்கழி மாதத்தில் வரும் விநாயகர் விரத வழிபாடு திரு கனக சபை அவர்கள் குடும்பத்தினர் வீட்டிலேதான் நடைபெறும். அப்படியொரு சந்தர்ப்பத் திலேதான் முதன்முதல் திரு கனகசபை அவர் களைச் சந்தித்தேன். வீட்டுக்கு வழிபாட்டுக்கென வருவோரை அன்புடன் உபசரித்து, குழந்தை களின் குறும்புகளைப் பொறுத்து, வழிபாடு நன்றாக நடைபெறத் தன்னாலான உதவிகளை வழங்கி, அதே மலர்ந்த முகத்துடன் வீட்டுக்கு அனுப்பிவைப்பதுவரை புன்னகை தவழும் முகத்துடன் இருப்பவர்தான் அவர். பின்னர் சங்கம் தனக்கென ஓர் இடம் வாங்கி நிரந்தரமாகிய பின்னரும் விநாயகர் விரத வழிபாட்டில் ஓர் உபயத்தைத் தொடர்ந்து அந்தக் குடும்பத்தினர் செய்துவருகிறார்கள்.

சைவமுன்னேற்றச் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக 1990இல் செயற்பட ஆரம்பித்த திரு கனகசபை அவர்கள், பாடசாலைச் செயலாளர், பொருளாளர், அறங்காவலர், துணைத்தலைவர், தலைவர் எனப் பல பதவி களில் இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காகச் சிறப்பாகச் செயற்பட்டவர். இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் இருபத்தெட்டாம் திகதி நடை பெற்ற நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் இன்றுவரை தலைவர்களாக இருந்த அனை வரும் கௌரவிக்கப்பட்டபோது அவர்களுள் ஒரு வராக வீற்றிருந்த காட்சி இன்னும் மனத்திலே பசுமையாக இருக்கிறது. பல வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி வந்த இவர், தன் உடல் நலம் குன்ற ஆரம்பித்தபோதுதான் உதவி செய்வதைக் குறைத்துக் கொண்டார். இருப்பினும் சைவ முன்னேற்றச் சங்க விழாக்களில் அவ்வப்போது வந்து கலந்து கொள்வதைத் தன் முக்கிய கடமையாகவே கொண்டிருந்தார்.

சங்கத்தின் செயற்குழுக் கூட்டங்கள் பலவற்றில் அவர் தேவையானபோது தன் கருத்துக்களை மிகவும் பணிவாக, அதேவேளை உறுதியாகத் தெரிவிப்பதில் வல்லவராக இருந்தார். யாருடைய மனத்தையும் அவர் புண்படுத்தும் வகையில் நடந்ததை நான் என்றுமே கண்டதில்லை. அத்துணை பண்பாளர் அவர். எல்லோருடனும் அன்புடனேயே பழகும் சுபாவம் அவருடையது. சொந்த வாழ்க்கை யிலும் திரு கனகசபை அவர்கள் பலருக்கு உதவி செய்துள்ளதை நண்பர்கள் மூலமாக நான் அறிவேன்.

இன்று அவர் எம்மிடை இல்லை என்பதை நினைக்கும்போது மனம் இலேசாக வலிக்கிறது. ஒரு நல்ல மனிதரை, பண்பாளரை, நண்பரை இழந்துவிட்டோம். "நெருநல் உளனொருவன் இன்றில்லை" என்று வள்ளுவர் சொல்லிவைத்த நிலையாமை இதுதானே!. திரு கனகசபை அவர்கள், மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என ஒரு பெரிய குடும்பத்தை இவ்வுலகில் விட்டுச்சென்றுள்ளார். அவரின் பிள்ளைகளும், அவர் இட்டுச்சென்ற வழியிலே தொடர்ந்து, சைவ முன்னேற்றச் சங்கத்துக்குத் தமது பங்களிப்பை நல்குவார்கள் என்று நம்பலாம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு கலசம் பத்திரிகையின் சார்பில் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**(படம்: சங்கத்தில் தலைமைப் பதவி ஏற்றபோது)**

# திருமந்திரத்தில் - சைவ சித்தாந்தம் - யோகாசனம்

திருமதி தனலட்சுமி குணசேகரம்

சைவத்திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக வழங்கிவரும் திருமந்திரத்தை அருளிய திருமூல நாயனார், 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார். "திருத்தொண்டத் தொகையில்"

**"நம்பிரான் திருமூலர் அடியார்க்குமடியேன்"**

என விளித்து கூறியதை வைத்து, அவர் சைவர்களால் போற்றப்படும் 63 நாயன்மார்களில் ஒருவரென நாம் அறிந்து கொள்ளலாம்.

திருமந்திரமே தமிழில் ஆக்கப்பட்ட முதல் ஆகம நூலாகும். இதனைப் பெரிய புராணத்தில் தெய்வச்சேக்கிழார் பெருமான்:

**"தண்ணிலார் சடையார் தாம் தந்ஆகமப் பொருளை**
**மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப"**

என்றுரைத்தார்.

"ஆகமம்" என்பது தொன்றுதொட்டு மரபில் வருவது என்று பொருள். தொன்றுதொட்டு வரும் அன்பு நெறியாகிய "சைவநெறி" திருமூலர் காலத்தில், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிநிலை களைக் கொண்ட வளர்ந்திருந்தது. திருமூலர் தனது ஆகம நூலாம் திருமந்திரத்தில் யோக பாதத்தை விரிவாகவும் ஏனைய மூன்றையும் பண்டைய தமிழ் நெறியைத் தழுவிச் சுருக்கமாகவும் கூறுகிறார்.

திருமூல நாயனார் அட்டமாசித்திகளும் ஒருங்கே பெற்ற சித்தர். சுந்தரன் எனப்பெயருடைய இவர், மாடு மேய்த்த ஓர் இடையன் இறந்து போக, அவனின் பசுக்களெல்லாம் தவித்து நிற்பதைப் பார்த்து, அன்பு மேலீட்டால் அவற்றில் இரக்கம் கொண்டு, தான் முன்னே செய்த யோகத்தின் பயனாக "பரகாமப் பிரவேசம்" என்றும் சித்தியின் பிரகாரம், இறந்த இடையனின் உடலுள் புகுந்து பசுக்களை ஓட்டிச் சென்று உரியவர்களிடம் ஒப்படைத்தார். இடையனின் பெயர் மூலன். சித்தர் விட்டுச் சென்ற உடலை காணவில்லை. மூலர் என்ற பெயருடனே திருவாவடுதுறை திருத்தலத்தை அடைந்து, அரச மர நிழலில் யோக நிட்டையில் இருந்து மூவாயிரம் ஆண்டுகள் மூவாயிரம் மந்திரங்களை ஆண்டுக்கொன்றாகப் பாடி அருளினார். இதற்குச் சான்று அவர் பாடியருளிய பாடல்களாகும்.

**நந்தி அருளாலே நாதனாம் பெயர் பெற்றோம்**
**நந்தி அருளாலே மூலனை நாடினோம்**
**நந்தி அருளாவது என்செய்யும் நாட்டினில்**
**நந்தி வழிகாட்ட நானிருந்தேனே (68)**

**இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தை**
**இருந்தேன் என் நந்தி இணையடிக்கீழே (80)**

இம்மந்திரங்கள் மூலமாக நாம் அறியக் கூடியது, எம்பெருமானாகிய சிவனின் திருவருளாலும், கருணை யாலும், அவனது கட்டளையாலும் மூலன் இருக்கும் இடத்தை நாடி வந்தோம். நந்தியெம் பெருமான் வழிகாட்டலில் தியானத்தில் பலகோடி ஆண்டுகள் பற்றொழிந்து இருந்தோம் என்பதாகும்.

திருமந்திரத்தில் கூறப்பட்ட சைவ சித்தாந்தக் கூறுகளாவன, பின்வரும் பாவின் மூலம் விளக்கமாகிறது.

**ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை**
**மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை**
**ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர**
**வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே (90)**

ஞேயம் - அறியப்படும் பொருள், மாமாயை - சுத்த மாயை, ஞானம் - அறிவு, பரையாயம் - சத்தியின் பேதங்கள், ஞாதுரு - அறிபவன், அகோசரம் - பற்றப்படாதது, அத்து -பகுதிப்பொருள் - விகுதி, வீயம் - வித்து

அறியப்படும் பொருளையும் அறிவையும் (பதி, சிவன், ஞானம்) அறிபவன் என்னும் ஆன்மா வையும் அசுத்த மாயை, சுத்த மாயை, சத்திபேதம், சிவம் அனைத்திற்கும் சங்கற்ப மாத்திரையில் நிமித்த காரணமாக உள்ளதும் சிந்தையும் செயலும் எட்டாத நிலையில் உள்ளதுமான பொருள் இவற்றையும் விளங்கிக் கொண்டேன்; முதலில் நான் விளங்கிக் கொண்ட பின்பே விளக்குகிறேன் என்று திருமூலர், இங்கு எளிய முறையில் திருமந்திரம் எவற்றைப் பற்றிச் சொல்ல வருகிறது என விளக்கியுள்ளார். திருமந்திரம் ஒன்பது ஆகமங்களை விளக்கும் வகையில் ஒன்பது தந்திரங்களாக வகுப்பட்டுள்ளது.

**பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்**
**உற்ற நல்வீரம் உயர்சித்தம் வாதுளம்**
**மற்ற அவ்வியாமளம் ஆகுங் காலோத்திரம்**
**துற்ற நற் சுப்பிரம் சொல்லும் மகுடமே (63)**

இதில் இருந்து, ஆகமங்கள் ஆவன முறையே காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்திரம், சுப்பிரபேதம், மகுடம் என வலியுறுத்துகிறார்.

முதலாவது தந்திரத்தில் காரண ஆகமத்தை விளக்கும் பாசுரங்கள் உள்ளன. இதில் 116 திருப்பாடல்கள் உள்ளன. இவை அறத்தினை அடிப்படையாகக் கொண்டு முப்பொருள் உண்மையை விளக்குகின்றன. பதி, பசு, பாச உண்மை விளக்கப்படுவதோடு யாக்கை நிலையாமை செல்வநிலையாமை, இளமைநிலையாமை, உயிர்நிலையாமை என்ற நான்கு தலைப்புக்களில் விளக்கப்படுகிறது. பதி, பசு, பாச உண்மை விளக்கம் 119 பாசுரத்தில் விளக்கப் படுகிறது.

**பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போற்பசு பாசம் அநாதி**
**பதியினைச் சென்றணு காபசு பாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நில்லாவே**

பதி -சிவம், பசு - ஆன்மா, பாசம் - ஆன்மாவைப் பற்றி நிற்கும் உலக இன்பமும் அதனால் வரும் பாவ புண்ணியங்களும். பசு குருவின் உபதேசத்தால் பதியை அனுகின் பாசம் விட்டொழியும்.
இரண்டாம் தந்திரத்தில் "காமிக" ஆகம் விளக்கப் பாடல்கள் உள்ளன. இத்தந்திரத்தில் சிவ புராண வரலாற்றுக் குறிப்புக்களும், கரு எப்படி உண்டாகிறது என்பதும், இறைவனின் ஐந்தொழில்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

இதன் முதல் பாட்டில் அகத்தியம் என்னும் தலைப்பில் தென்திசை தேடி "அகத்தியர்" வந்தார் என்னும் புராண வரலாறு பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

**நடுவுநில் லாதுஇவ் வுலகஞ் சரிந்து**
**கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்**
**நடுவுள அங்கி அகத்திய நீபோய்**
**முடுகிய வையத்து முன்னிரென் றானே. (337)**

இதன் பொருள், சிவன் பார்வதி திருமணக் கோலம் காண உலகமே திரண்டு திருக்கயிலை மலையில் கூடியது. ஈசன் அகத்தியமுனியை அழைத்து, உலகின் வடபகுதி கீழே தாழ்கிறது தென்பகுதி உயர்கிறது.

இம்மந்திரம்:

**கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய**
**வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கள்காமம்**
**இல்லான் நியமத் திடையில்நின் றானே**

இப்பண்புகளை உடையவர்களே இமய யோக நெறியில் நிற்பவர்களாகும். நியம யோக நெறியை இவ்வாறு விளக்குகிறார் திருமூலர்.

**தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெம்மை**
**வாய்மை நிலைமை வரைதலே மற்றிவை**
**காமங் களவு கொலையெனக் காண்பவை**
**நேமியீ ரைந்து நியமத்த னாமே** *(556)*

நியமத்தான் எனப்படுபவன் பரிசுத்த மணம், கருணை உள்ளம், குறைவான உணவு உண்ணல், நேர்மை, உண்மைபேசுதல், நடுவுநிலைமை தவறாது இருத்தல் ஆகிய பன்புகளோடு பெண்பத்து, திருட்டு, கொலை என்பவற்றை தீயது என உணர்ந்து நீக்குதல் ஆகிய 10 பண்புகளை கொண்டிருக்க வேண்டும்.

**திருமூலர் பத்மாசனம் பற்றி தரும் விளக்கமாவது**

ஆசனங்கள் செய்வதன் மூலம் உடல் அமைதி அடைகிறது. எவனுடைய மனதில் அலைகள் அமைதி அடைந்தனவோ, அவனே 'யோகி' என்பது பழமொழி மூச்சுப்பயிற்சி உள்ளவர்க்கு அதாவது பிராணயாமம் செய்பவர்களுக்கு மனம் அலை பாயாத ஒருமுகப்படும் இதைத் திருமூலர்

**ஆரியன் அல்லன் குதிரை இரண்டுள**
**வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை**
**கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்**
**வாரிப் பிடிக்க வசப்படும் தானே** *(565)*

மனமாகிய பெரியோன் மிகவும் நல்லவன். அவனிடம் இரண்டு குதிரைகள் உள்ளன. அவை இடது மூக்கு (இட நாடி) வலது மூக்கு (பிங்கள நாடி) வழியாக ஓடிக்கொண்டிருக்கும் மூச்சுக்காற்றை கயிற்றை வீசிப்பிடிக்கும் வழி பலருக்கும் தெரியவில்லை. வீசிப்பிடித்தல் என்னும் போது உள் இழுத்தல் - பூரகம், வெளிவிடுதல் - இரேசதம், நிறுத்தல் - கும்பகம் என்னும் மூச்சுப் பயிற்சியின் மூன்று நிலைகளையும் விளக்கி அத்தோடு குருவின் துணையோடு இதைச் செய்ய வேண்டும் என்கிறார்.

**தியானம் என்பதன் விளக்கத்தை திருமூலர் கூறுவது**

**வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்**
**பொருவாத புந்தி புலன்போக மேவல்**
**உருவாய சத்தி பரத்தியானம் உன்னும்**
**குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே** *(598)*

தியானம் என்பது உணர்வும் நினைவும் ஒன்றி இருக்கும் நிலை. மெய்யாகிய புத்தி புலன்களில் வைத்த பற்று நீங்கி இருப்பதாகும். உருவோடு கூடிய சத்தியை தியானித்தல் "பரத்தியானம்" சிவனைத் தியானித்தல் சிவத்தியானம் இவை இரண்டும் விசயோகத்தின் கூறுகளாகும் என்கிறார்.

**சமாதி நிலை பற்றி**

**சமாதி யமாதியிற் தான்செல்லக் கூடும்**
**சமாதி யமாதியிற் றானெட்டுச் சித்தி**
**சமாதி யமாதியிற் றங்கினோர்க் கன்றே**
**சமாதி யமாதி தலைப்படும் தானே** *(618)*

உணர்வும் நினைவுமற்று உடம்பை மறந்து இறை பற்றில் ஆழ்ந்திருக்கும் நிலையே 'சமாதி' எனப்படும். யோகத்தின் அதியுச்ச நிலை சமாதி. சமாதி நிலையடைவதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் ஈநாகிய ஏழு நிலைகளைத் தாண்டியே அடைய முடியும் என்கிறார

**கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று**
**சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்**
**பொற்பனை நாடிப் புணர்மதி யோடுற்றுத்**
**தற்பர மாகத் தகுந்தண் சமாதியே (628)**

கற்பனையான வீணான எண்ணங்களையெல்லாம் விட்டு மூலதாரத்தின் வழியே மேல்நோக்கி பிராணனைச் செலுத்தி அழகிய சித்திர மண்டபம் போல் இவ்வுலகினைப் படைத்துள்ள பேரொ ளிப் பிளம்பாகத்திகழும், பெருமைக்கும் போற்றுதலுக்குமுரிய பரம்பொருளை புருவ மத்தியில் சிவஞான சிந்தையில் ஒன்றி தான் என்ற பேதமற்று சிவமாகி இருக்கின்ற நிலையே 'சமாதி' என்கிறார்.

உறுதியான மெய்ஞ்ஞானத்தை அடைய உடம்பும் நன்றாக இருக்க வேண்டும் என்பதைத் திருமூலர்

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (724)**

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே (725)**

எமது உடலைத் திடகாத்திரமாக்கி எமது உடலினுள்ளே உறையும் இறை ஞானத்தினை எய்த முடியும் என்கிறார்.

யோகம் செய்வதன் பயனை இவ்வாறு கூறியுள்ளார்.

**அஞ்சனம் போலுடல் ஐஅறும் அந்தியில்**
**வஞ்சக 'வாதம' அறும்மத்தி யானத்தில்**
**செஞ்சிறு காலையிற் செய்திடில் 'பித்தறும்'**
**நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே (727)**

வாதம், பித்தம், கபம் உடலில் இருக்க வேண்டிய அளவிலும் கூட இருந்தால், விஷத்தன்மை உண்டாகும். யோகத்தினால் விஷத்தன்மை நீங்கும் பொருத்தமான நேரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.
ஒரு மந்திரத்தினையோ பாடலினையோ அதன் பொருளுணர்ந்து ஓதும் போது தான் சிவனருள் கிடைக்கப் பெறும் என்பதை உறுதி செய்கிறார். தவயோகத்தை முறையாகவும், குரு கற்பித்த வழியிலும் நன்கு சிந்தித்துச் செயல்படல் வேண்டும் என்கிறார். எனவே இதனைத் தம்பட்டம் அடித்து, ஊரெல்லாம் பரப்பி ஆடம்பரம் பண்ணாமல், அமைதியாகத் தன்னடக்கத்தோடு மேற்கொள்ள வேண்டும் என்பதை பின்வருமாறு கூறுகிறார்.

**முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்**
**இறையிறை யார்க்கும் இருக்க அரிது**
**மறையது காரணம் மற்றொன்று மில்லை**
**பறையறை யாது பணிந்து முடியே (748)**

திருமந்திரம் ஆகம நூலாகவும் அற நூலகவும் திருமூலரால் படைக்கப்பட்ட ஒரு பொக்கிஷம். 'அன்பே சிவம்'. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'

உணர்வும் நினைவுமற்று உடம்பை மறந்து இறை பற்றில் ஆழ்ந்திருக்கும் நிலையே 'சமாதி' எனப்படும். யோகத்தின் அதியுச்ச நிலை சமாதி. சமாதி நிலையடைவதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் ஈநாகிய ஏழு நிலைகளைத் தாண்டியே அடைய முடியும் என்கிறார

**கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று**
**சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்**
**பொற்பனை நாடிப் புணர்மதி யோடுற்றுத்**
**தற்பர மாகத் தகுந்தண் சமாதியே (628)**

கற்பனையான வீணான எண்ணங்களையெல்லாம் விட்டு மூலதாரத்தின் வழியே மேல்நோக்கி பிராணனைச் செலுத்தி அழகிய சித்திர மண்டபம் போல் இவ்வுலகினைப் படைத்துள்ள பேரொ ளிப் பிளம்பாகத்திகழும், பெருமைக்கும் போற்றுதலுக்குமுரிய பரம்பொருளை புருவ மத்தியில் சிவஞான சிந்தையில் ஒன்றி தான் என்ற பேதமற்று சிவமாகி இருக்கின்ற நிலையே 'சமாதி' என்கிறார்.

உறுதியான மெய்ஞ்ஞானத்தை அடைய உடம்பும் நன்றாக இருக்க வேண்டும் என்பதைத் திருமூலர்

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (724)**

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே (725)**

எமது உடலைத் திடகாத்திரமாக்கி எமது உடலினுள்ளே உறையும் இறை ஞானத்தினை எய்த முடியும் என்கிறார்.

யோகம் செய்வதன் பயனை இவ்வாறு கூறியுள்ளார்.

**அஞ்சனம் போலுடல் ஐஅறும் அந்தியில்**
**வஞ்சக 'வாதம்' அறும்மத்தி யானத்தில்**
**செஞ்சிறு காலையிற் செய்திடில் 'பித்தறும்'**
**நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே (727)**

வாதம், பித்தம், கபம் உடலில் இருக்க வேண்டிய அளவிலும் கூட இருந்தால், விஷத்தன்மை உண்டாகும். யோகத்தினால் விஷத்தன்மை நீங்கும் பொருத்தமான நேரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.
ஒரு மந்திரத்தினையோ பாடலினையோ அதன் பொருளுணர்ந்து ஓதும் போது தான் சிவனருள் கிடைக்கப் பெறும் என்பதை உறுதி செய்கிறார். தவயோகத்தை முறையாகவும், குரு கற்பித்த வழியிலும் நன்கு சிந்தித்துச் செயல்படல் வேண்டும் என்கிறார். எனவே இதனைத் தம்பட்டம் அடித்து, ஊரெல்லாம் பரப்பி ஆடம்பரம் பண்ணாமல், அமைதியாகத் தன்னடக்கத்தோடு மேற்கொள்ள வேண்டும் என்பதை பின்வருமாறு கூறுகிறார்.

**முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்**
**இறையிறை யார்க்கும் இருக்க அரிது**
**மறையது காரணம் மற்றொன்று மில்லை**
**பறையறை யாது பணிந்து முடியே (748)**

திருமந்திரம் ஆகம நூலாகவும் அற நூலகவும் திருமூலரால் படைக்கப்பட்ட ஒரு பொக்கிஷம். 'அன்பே சிவம்'. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'

**பத்துத் திசையும் பரம்ஒரு தெய்வமுண்டு**
**எத்திக் கினில்இல்லை என்பது இனமலர்க்**
**கொத்துத் திருவடி நீழல் சரண்எனத்**
**தத்தும் வினைக்கடல் சாராது காணுமே**

இப்பாடல் மூலம் கிரியை வழிபாடு இறைவனைப் புற வழிபாட்டின் மூலம் அடையும் நெறியை விளக்கிறது.

**யோகம்**

யோக நெறி மூலம் இறையருள் பெறும் முறை இப்பாடல் மூலம் விளக்கிறார்.

**நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்**
**தறிஇருந் தாற்போலத் தம்மை இருத்திச்**
**சொறியினும் தாக்கினும் துண்ணென் றுணராக்**
**குறிஅறி வாளர்க்குக் கூடலு மாமே. *(1457)***

அடித்த கட்டுத்தறிபோல் அசைவற்றுத்தம் உடலை இருக்கச் செய்து, உடலைச் சொறிந்தாலும் அடித்துத் துன்புறுத்தினாலும் இவை எதனையும் உணராது, தாங்கள் அடைய வேண்டி இலட்சியமே குறியாக இருந்து, தியானம் செய்பவர்க்கு யோகம் எளிதாகக் கைகூடும் என்கிறார்.

**ஞானம்**

ஞான விளக்கத்தை 1469ம் பாடல் விளக்குகிறது.

**தன்பால் உலகம் தனக்கரு காவதும்**
**அன்பால் எனக்கரு ளாவதும் ஆவன**
**என்பார்கள் ஞானமும் எய்தும் சிவோகமும்**
**பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே *(1469)***

சீவன்கள் தம்மிடமே நினைப்பால் உண்டாக்கிக் கொண்டிருக்கின்ற உலகங்கள், தன்னைச் சுற்றியுள்ள இன்னும் பல உலகங்கள் எல்லாம், தமக்கு அன்பால் சிவனருளால் அருளப் பெற்றவை என்றிருக்கும் ஞான உணர்வே சிவபதம் எனப்படும். இதுவே பெரும் பேறு பெற்றுத்தகும்.

இனி யோகப்பயிற்சி பற்றி திருமூலர் கூற்றைப் பார்ப்போம். மனிதன் மேற்கொள்ளும் அகமுகப் பயணமே யோகம் என்பது. பலவகையான யோக முறைகள் இருப்பினும் "சிவயோக சித்தாந்த முறையே" மிகவும் தொன்மையானது. சிவயோக சித்தாந்த முறையாவது யோகி சிவன் பார்வதி தேவிக்கு, குண்டலினி பிராணயாம மூச்சுப் பயிற்சியினை இமயமலை அடிச்சாரலில் அமைந்துள்ள 'அமர்நாத' என்னும் தலத்தில் வைத்து பயிற்றுவித்தமையுடன் ஆரம்பமாயிற்று என்பர்.

திருமந்திரத்தில் அட்டாங்க யோகம் பற்றிய விளக்கம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**இயம நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரம்**
**சயமிகு தாரணை தியானஞ் சமாதி**
**அயமுறும் அட்டாங்க மாவது மாமே *(223)***

இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டும் அட்டாங்க யோகத்தின் உறுப்புகள் ஆகும். இவையே சீவான்மாக்களை நல்வழிப் படுத்தும் என திருமந்திரம் கூறுகிறது.

மேற்கூறிய எட்டு வகை யோகங்களுள், இமயம் நியமம் என்பன கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கம் பற்றி எடுத்துரைக்கின்றன.

# அமுதத் தமிழில் ஆகமத்தை அருளிய வள்ளல்

**அநுஜா**

சித்தர்கள் சித்தமெல்லாம் சிவமயமாக வாழ்ந்து மனிதகுலத்தின் மேம்பாட்டுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். யோகப் பயிற்சியினால் பன்முக ஆற்றல் மிக்கவர்களாக விளங்கினர். இவர்களுள் முக்கியமான ஒருவர் திருமூலர் நாயனார். இவர் ஆகமத்தைத் தமிழில் எழுதுவதற்காகவே தன்னை இறைவன் படைத்ததாகக் கூறுவர்.

**பின்னைநின் றென்னே பிறவி பெறுவது**
**முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே**

மனிதப் பிறவி எடுத்தும், தவம் செய்யாதவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றனர். தான் செய்த தவப்பயனால் தனக்கு இப்பேறு கிடைத்ததாகத் திருமூலர் கூறுகிறார். இவர் இயற்றிய திருமந்திரம் 3339 பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் தமிழின் இனிமையை உணர்த்துகின்றது. பொருட் செறிவும் ஓசை நயமும் இலக்கிய நயமும் மிகுந்தவை இப்பாடல்கள். எவராலும் இலகுவிற் புரிந்துகொள்ளக்கூடியளவு எளிமையானவை.

**“யான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்”** என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். தான் பெற்ற சிவாநுபவத்தையும், தான் உணர்ந்த மனித வாழ்வின் தத்துவத்தையும் திருமந்திரம் மூலம் நாமெல்லோரும் கற்றுணர்ந்து பயன் அடையவேண்டும் என்ற திருமூலரின் அவாவை இச் சொற்றொடரால் அறியக்கூடியதாக உள்ளது.

எல்லோரும் இறைவனின் குழந்தைகளே என்னும் பெருநோக்கைப் பின்வரும் பாடல் எடுத்தியம்புகிறது.

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே**

உலகிலுள்ள மக்கள் அனைவரும் வேறுபாடின்றி ஒரு இனத்தவரே (மனிதர்களே). மனித சக்திக்கு மேலாகச் சர்வ வல்லமை பொருந்தியதாக இருப்பது ஒரு கடவுளே என்னும் குறிக்கோளை உங்கள் மனத்தே நிலைநிறுத்துங்கள். அதுவே நாம் உய்வதற்கு (கடைத்தேறுவதற்கு) ஒரே வழியாகும். இதனை மேலும் வலியுறுத்த மற்றொரு பாடலில் அன்பும் சிவமும் இரண்டு வேறுபட்ட பொருள்கள் அல்ல, இரண்டும் ஒன்றே. அன்புதான் சிவமாகிறது என்பதை அறிந்துவிடில் சிவானந்தப் பேரறிவைப் பெறுவார்கள் என்கிறார் திருமூலர். அன்புள்ள இதயத்திலேதான் இரக்கம் பிறக்கும்; கருணை பெருகும். அதனால், தானதருமம் செய்யத்தோன்றும். இதனால்தான் “மக்கள் சேவையே மகேசன் சேவை” என்று பெரியோர்கள் சொல்லியுள்ளார்கள். அன்பின் வலிமையால் எதையும் சாதிக்கலாம் என்ற உண்மையை நாம் அன்றாட வாழ்விலே காணமுடிகிறது.

இறைவனை அடைவதற்கு இலகுவான வழியையும் திருமூலர் கூறுகிறார். சிவ சிவ, அரகர அரகர என இறைவன் நாமத்தைச் செபியுங்கள். எமது தீவினைகள் எம்மைவிட்டுப் போய்விடும்,

நாம் தேவர்கள் ஆகிவிடலாம். பிறவித் துன்பத்திலிருந்து விடுபடலாம் எனப் பின்வரும் பாடல்களிற் குறிப்பிடுகின்றார்.

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே**

**அரகர என்ன அரியதொன் றில்லை**
**அரகர என்ன அறிகிலர் மாந்தர்**
**அரகர என்ன அமரரும் ஆவர்**
**அரகர என்ன அறும்பிறப் பன்றே**

ஞானசம்பந்தரும் இதே கருத்தை, காதலாகி, கசிந்து கண்ணீர்வர, "நமசிவாய" என்று செபித்தால் நன்னிலை பெறலாம் என்கிறார்.

இறைவன் அடியார்கள் உலகில் எங்கும் எதிலும் இறைவனின் பேரருட்சக்தியைக் காண்பார்கள். ஆனால் ஏனையோர் பஞ்சபூதத்தாலான (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) உலகத்தையே காண்பார்கள். இதனைச் சிறந்த உவமையொன்றால் திருமூலர் வர்ணிப்பதைப் பின்வரும் பாடலிற் காணலாம்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே**

மரத்தினால் செய்யப்பட்ட அழகான யானையை நாம் பார்க்கும்போது அதை யானை என்றே குறிப்பிடுவோம். மரம் என்று குறிப்பிடமாட்டேம். ஆனால் அதே யானையை அது எந்த மரத்தினாற் செய்யப்பட்டது என்று ஆராய முற்பட்டால் யானை நம் கண்ணுக்குத் தெரியாது. அந்த யானை செய்யப்பட்ட மரந்தான் தெரியும்.

வாழ்க்கை நிலையாமையை ஒரு வேடிக்கையான கதைபோலக் கூறுகிறார். மனைவி சுவையாகச் சமைத்து வைத்த உணவை இரசித்து உண்டான் கணவன். பின் அவளுடன் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்தான். சிறிது நேரத்தின் பின் இடப்பக்கம் சிறிது வலிப்பதாகக் கூறிக் கீழே படுத்தான். படுத்தவன் படுத்தவன்தான், பின்னர் எழுந்திருக்கவேயில்லை.

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்க மேயிறை நொந்ததிங் கென்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே**

இன்னொரு பாடலில் அரசியலைப்பற்றிக் கூறுகிறார். அறிவில்லாத அரசனும் இயமனும் ஒரே மாதிரியானவர்கள். ஆனால் கல்வியறிவில்லாத அரசனைவிட இயமன் நல்லவன். இயமன் அறநெறி வழி நின்றே உயிரை எடுப்பான். ஆனால் அரசனோ ஆராயாமல் கொல் என ஆணையிடுவான்.

**கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்**
**கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்**
**கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்**
**நல்லாரைக் காலன் நணுகிநில் லானே**

செல்வம் மனிதனுக்குப் பயன்படாது என்பது மட்டும் அல்லாமல் தீமைகள் நடைபெறவும் வழிவகுக்கும். அது எப்படியெனில், தேனீயானது பூவின் மணத்தை ஆராய்ந்து, தேனைச் சேகரித்துக் கூடுகட்டி அதில் சேமித்து வைப்பது தான் அநுபவிக்கவேண்டும் என்ற நோக்குட னாகும். ஆனால் வலிய வேடர் தேனீயை விரட்டிவிட்டு, தாமே அந்தத் தேனை எடுத்து அநுபவிப்பர். அதுபோல நாம் தேடிவைக்கும் செல்வமும் பிறரால் கவரப்படும்.

**ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்**
**கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே**

உலகில் இறைவனை வணங்கி அவனருள் பெறுவதே நித்திய இன்பம் தரும். அதனால் அப்பனாகிய இறைவனை ஏத்துவீர் எனப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

**அப்பனை நந்தியை ஆரா அமுதினை**
**ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை**
**எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்**
**அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே**

தமிழருக்கென்றே முன்னோர் எழுதிக்குவித்த அரும்பெரும் சொத்துக்கள் சமய நூல்கள். அவற்றின் அருமை, பெருமைகளை உணர்ந்து கற்று உய்வோமாக. அடுத்த தலைமுறையி னரையும் வழிப்படுத்த முயல்வோம்.
வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை

## வெல்லவேண்டிய ஐந்து பகைவர்கள்

ஐம்பொறிகளால் பெறப்படும் புலன் உணர்வுகளே சுமைகளாகும்:

1. 'ஆயமாய காயம் தன்னுள் ஐவர்நின்று ஒன்றல் ஒட்டார்
   மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே' - ஞானசம்பந்தர் (1-50-7)

2. 'ஐவரை அகத்தே வைத்தீர்; அவர்களே வலியர்; சாலச்
   செய்வதொன்று அறிய மாட்டேன் திருப்புக லூர னீரே' - அப்பர் (4-54-9)

3. 'ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி ஆழ்குளிப்பட்டு அழுந்துவேனுக்கு
   உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே' - சுந்தரர் (7-5-1)

4. 'மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்து' - மணிவாசகர் (8-22-1)

**நன்றி: திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் இணையதிபர் அருளுரைகள், திருமுறைக் கருவூலத்திலிருந்து**

# மழை நின்றது.......

## - ஓர் உண்மை நிகழ்வு!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டு நடந்த சம்பவம். இலங்கையில் இந்தியப்படை இருந்த காலம். ஒரு பெண்ணுக்குத் திருமணம் நிச்சயித்தார்கள். பெண்ணின் ஊர் விழிசிட்டி என்ற கிராமம். தெல்லிப்பளையின் ஒரு பகுதி. மாப்பிள்ளை சுன்னாகத்தைச் சேர்ந்தவர். இருவர் வீடுகளுக்கும் இடையில் சுமார் நான்கு மைல் தூரம். திருமணம் நடக்கவிருந்த தினம் காலையில் இருந்தே மழை கொட்டிக்கொண்டிருந்தது. நிற்பதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. திருமணத்தை எப்படி நடத்துவது? இது பெண்ணைப்பெற்றவரின் மனத்தில் எழுந்த கவலை; சிந்தனை.

பெண்ணைப் பெற்றவர் ஒரு சிவபக்தர். மிகுந்த ஆசாரமாக வாழ்ந்து வருபவர். அவருடைய மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. தன் மைத்துனரை அழைத்தார். மைத்துனரின் கையில் ஒரு தேவாரப் புத்தகத்தைக் கொடுத்தார். அதிலே **"வையக முற்றும்"** என்ற சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரத்தைச் சுட்டிக்காட்டி, **"இந்தத் தேவாரத்தை இடைவிடாது ஒருமனதாக ஓமகுண்டத்துக்கு அருகில் இருந்து ஓதுங்கள்"** என்று மைத்துனரைப் பணித்துவிட்டு, அவர் தன்பணிகளைச் செய்யப் போய்விட்டார். மைத்துனரும் அவர் குறிப்பிட்ட இடத்தில் இருந்து அந்தத் தேவாரத்தைத் திருப்பித் திருப்பி ஓதிக்கொண்டிருந்தார். என்னே அதிசயம்? மழை நின்றது. மாப்பிள்ளை அழைப்பு, மாங்கல்யதாரணம் எனத் திருமணச் சடங்குகள் அனைத்தும் சிறப்பாக, எவ்வித தடங்கல்களுமின்றி நடந்தேறின. வந்தோர் உணவருந்தி, புதுமணத் தம்பதி கணவர் வீட்டுக்குப் போனபின், தேவாரம் ஓதல் நின்றதும், மழை மீண்டும் கொட்ட ஆரம்பித்தது.

சில காலத்தின் பின் யுத்தம் தீவிரமடைந்த காரணத்தால் மக்கள் இடம் பெயரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவர்களும் - மைத்துனர் இருவரும் - அளவெட்டி என்ற அருகிலிருந்த கிராமத்துக்குச் சென்று அங்கு சிலநாள்கள் தங்கியிருந்தனர். அப்போது ஒரு நாள் நல்ல மழை பெய்தது. இவர்கள் இருவரும் பழைய சம்பவத்தை; மழை கொட்டியதை, திருமணத்தை, தேவாரம் ஓதி மழை நின்றதை நினைவுகூர்ந்து சிலாகித்தார்கள்.

இவர்களின் உரையாடலை அந்த வீட்டின் சொந்தக்காரரர் கேட்டார். அவர் இவர்கள் இருவரையும் பார்த்து, "என்ன? தேவாரம் பாடி மழை நிற்குமோ? அப்படியானால் இப்போது பெய்யும் மழையை இருவரும் தேவாரம் பாடி நிறுத்திக் காட்ட முடியுமா?" என்று ஏளனமாகக் கேட்டார். "இது பரீட்சை செய்து பார்க்கும் விடயமன்று. தயவுசெய்து அப்படிக் கேட்காதீர்கள்" என்று இருவரும் பவ்யமாகப் பதில் சொன்னார்கள். அவரோ விடுவதாக இல்லை. "இப்போது அதே தேவாரத்தைப் பாடி இந்த மழையை நீங்கள் நிறுத்தவில்லை என்றால் முன்னர் மழை நின்றது ஒரு தற்செயலான நிகழ்வு என்றே நான் கொள்ளுவேன்" என்றார் அந்த வீட்டுச் சொந்தக்காரரர்.

மைத்துனர் இருவரினதும் கடவுள் நம்பிக்கையை இவர் கொச்சைப்படுத்தியது அவர்களுக்குக் கவலையளித்தது. உடனே இருவரும் கடவுளை வணங்கி அந்தத் தேவாரத்தை பக்தியோடு பாடினார்கள். பாடி முடிய, கொட்டிய மழை திடீரென நின்றது. கேட்டவர் திகைத்துவிட்டார். அவர்கள் இருவரையும் வணங்கி, மன்னிப்பும் கேட்டார். இது உண்மையாக நடந்த ஒரு நிகழ்வு.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைத் தூதாக அனுப்பினார் என்பதைக் கேள்வியுற்ற சிவபக்தரான ஏயர்கோன் கலிக்காமர் சுந்தரர் மீது மிகுந்த கோபங் கொண்டார். இதையறிந்த சுந்தரர் தாம் செய்தது தவறுதான் எனத்துணிந்தார். தம்மை ஏயர்கோன் கலிக்காமருடன்

சேர்த்துவிடும்படி இறைவனிடம் விண்ணப்பித்தார். இறைவரும் இவர்கள் இருவரையும் நண்பர்களாக்கத் திருவுளங் கொண்டார். அதன்படி கலிக்காமருக்குச் சூலைநோயைக் கொடுத்தார். அவரின் சூலைநோயை நீக்கும்படி சுந்தரரைப் பணித்தார். சுந்தரரும் கலிக்காமரின் ஊருக்குப் புறப்பட்டார். தாம் வருவதை முன்னரே அறிவித்தார். சுந்தரர் வருகிறார் எனக் கேள்வியுற்ற கலிக்காமர், சுந்தரனால்தான் இந்நோய் தீருமென்றால், அதைவிட உயிர்விடுவதே மேலென்று உடைவாளை உருவித் தன் உதரத்தைக் கிழித்து இறந்தார். அவரின் மனைவியாரும் உடன் இறக்க முற்பட்டபோது சுந்தரர் வந்துவிட்டார் என்ற செய்திகேட்டு, கணவரின் மறைவை மறைத்து சுந்தரரை உபசரித்தார். சுந்தரர் வந்தடைந்ததும் நிகழ்ந்ததை அறிந்து தானும் தன் உயிரைப் போக்க, வாளைத் தன்கையாற் பிடித்தார். அப்போது கலிக்காமர் இறையருளால் உயிர்த்தெழுந்தார். பின்னர் இருவரும் நண்பர்களாயினர். சில காலத்தின்பின் திருப்புன்கூர் தலத்திலுள்ள சிவனைத் தரிசிக்கச் சென்றார்கள். அப்போது சுந்தரர் அருளிய “அந்தணாளனுன் அடைக்கலம் புகுத” என்ற தேவாரத்துடன் தொடங்கும் பதிகத்தில் இரண்டாவது தேவாரம் இது.

ஏயர்கோன் கலிக்காமரின் ஊர் வரண்டு மழையின்றி இருந்தபோது, நிலத்தைத் தானமாகத் தருகிறேன், மழை தருவிக்கவேண்டும் என்று இறைவனை அவர் வேண்டினார். இறையருளால் மழை அளவுக்கதிகமாகவே பொழிந்தது. அதனால் ஏற்படக்கூடிய அழிவைக் கண்டு கலிக்காமர் மழையை நிறுத்தினால் மேலும் அதேயளவு நிலம் தருவேன் என்று வேண்டினார். மழையும் நின்றது. இந்தக் குறிப்பைத்தான் தமது இரண்டாவது தேவாரத்தில் சுந்தரர் குறிப்பிடுகின்றார். கலிக்காமர் கொடுத்த நிலத்தின் அளவு, முதலில் மழை வரப் பன்னிரண்டு வேலி, பின்னர் மழையை நிறுத்த இன்னொரு பன்னிரண்டு வேலி என்று தெரிகிறது.

**வையக முற்று மாமழை மறந்து வயலில் நீரினை மாநிலந் தருகோம்**
**உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்**
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே

திரு 7 பதி 55 பா 2 .

## "தீர்த்த" முகமா, "தீர்க்கு" முகமா? என்ற ஐயத்தைத் தீர்க்குமுகமாக!

ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே என்ற பாடலில் வரும் வரி, கூறுமடியார்கள் வினை “தீர்த்த” முகமா, இல்லை கூறுமடியார்கள் வினை “தீர்க்கு” முகமா? - விமலன், லண்டன்.

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே

என்ற வரிகளைப் பாருங்கள். வேல் வாங்கி நின்றது, சூரனை வதைத்தது, வள்ளியை மணந்தது எல்லாம் கடந்தகால நிகழ்வுகள். மயிலேறி விளையாடுவது, ஈசருடன் பேசுவது ஆகியவை அன்றும் இன்றும் நிகழும் நிகழ்வுகள். அடியவர்கள் தீவினைகளை நேற்றல்ல, இன்றல்ல, என்றென்றும் தீர்ப்பவன் அல்லவா கந்தக் கடவுள்! அறுமுகக் கடவுளை ஒருமுகமாய் வழிபட்டால், எதிர்காலத் தீவினைகளையும் அவன் தீர்ப்பான். எனவே தீர்க்குமுகம் எனச் சொல்லி வழிபடுவதே சிறப்பு.

- அமுதசுரபி மார்ச் 2016 பக்கம் 61

***Hinduism in search of Answers...***

# PILGRIMAGE

**What are the holy places, that Hindus go to on pilgrimage?**
**(Continued from last issue)**

**Seven sacred cities**
**(Holy Sthalms/Moksha Sthalams/Mukthi sthalams):**




These are places of birth of religious and spiritual masters, places where Gods have descended as avatars (incarnations) and places considered as naturally endowed with spiritual powers.

**1. Ayodhya**

Ayodhya is the legendary place where Lord Rama was born. The town is located on the banks of river Sarayu.



The historic legacy of this place is traced to sixth century BC, as established by archaeological and literary references. It is also the place where the Babri Masjid was built by the Mughals in the 16th century (since destroyed in 1992).

**2. Mathura**

Mathura is located on the right bank of the Yamuna River. Lord Krishna was born here.

British archeologists were successful in recreating the ancient historicity of the city and providing insight to Indian culture. Krishna temples and ancient history are now both major attractions of the city.





The present Keshav Dev Temple has been built at the same location where several major temples had been built in the 5000 years of past.

**3. Mayapuri- Haridwar**

Haridwar has shrines of both Shiva and Vishnu. The sacred river Ganges emerges from the hills into the plains at this place. Haridwar literally means "gateway to god Vishnu (Hari)". It is on the western bank of the river Ganges as it emerges into the plains.



It is from here that the Ganges travels a distance of 2,000 kilometres through the fertile Gangetic plains of North India. It is the pious location where, hindus from all parts of the country, particularly North India, immerse ashes of the dead and perform last rites.

The 12 years cycle Kumbh Mela is held during January or February (depending on the Hindu Almanac). It is the occasion when lakhs of people congregate here for a holy dip in the Ganges.

**4. Kasi – Varnasi (Benares)**

Varanasi is the place of salvation as it is strongly believed that death at this place will bring salvation. Varanasi is the holiest of all, thus it is often referred as City of Lord Shiva.



In view of its ancient historic, cultural and religious heritage it is considered as the most holy of the seven sacred cities of Hinduism. Its historical and religious legacy dates to the Budhha period (6th Century BC) and has been the centre of religious "Brahminical learning" with sages, philosophers, writers and musicians.

The temples and the bathing ghats (ghats are embankments made in steps of stone slabs along the river bank where pilgrims perform ritual ablutions) are located on the left west bank of the holy Ganges river. One of the most venerated and frequented ghats for devotional worship by the pilgrims is the Manikarnika Ghat. At one of the ghats, Hindus cremate their dead.

Varanasi is also known as the favourite city of the Hindu deity Lord Shiva as it has been mentioned in the Rigveda that this city in older times was known as Kashi. The Pandavas went to Kashi in search of Shiva to atone for their sins of fratricide and bramhanahatya that they had committed during the epic Kurukshetra war of Mahabharata epic.

**5. Kanchi – Kanchipuram**

Kanchipuram is known for its Kamakshi Amman Temple dedicated to the Mother Goddess. Marriage festival of Kamakshi at Kanchipuram is a special occasion.

Kanchipuram was built during the Pallava Dynasty between 6th and 8th centuries. Aathi Shankara, the Hindu philosopher saint, who propagated the Advaita philosophy lived and taught here in the eighth century AD. Kamakshi Amman temple is an ancient temple here and the most famous of all the temples in the city. Legend has it that Kamakshi offered worship to a Shivalingam made out of sand and gained Shiva's hand in marriage.




The temple covers an area of about 5 acres and the sanctum is covered with gold plated Vimana. The city has 108 Shaiva and 18 Vaishnava temples. The Hindu philosopher Ramanujacharya who propagated the Vishishtadvaita philosophy studied here. Some of the exquisitely designed and built temples are the Ekamabareshwar temple tower which is 192 feet (59 m) in height, and the Varadaraja Swamy temple, which has a 1000-pillar hall.




**6. Avantipuri – Ujjain**

Ujjain, also known by the ancient name Avanti, has one of the 12 Jyotirlingas installed in the Mahakaleshwar Temple. Each of these cities is also famous for the spectacular Melas or fairs held. Haridwar and Ujjain are famous for the Kumbh Mela held once every 12 years.

The city dates back to the period of Vikramaditya and Ashoka (3rd century BC). The religious tradition links it to god Shiva triumphing over the demon king Tripurasura. Mahakaleshwar Temple is a Hindu temple dedicated to Lord Shiva and one of the twelve Jyotirlingam shrines which are said to be the most sacred abodes of Lord Shiva.



**7. Dwaraka**

Dwarka represents the place where Lord Krishna, after leaving Mathura, spent his years as the king, before He left for His divine abode from here, according to the epic Mahabharata. Krishna Janmashtami ( birth day of Krishna - generally held in August as per Hindu calendar) is a special occasion in Dwarka and Mathura.



The original city is now submerged in the Arabian Sea.

During 1983-1990, the Marine Archaeology Unit of India's National Institute of Oceanography carried out underwater excavations at Dwarka. This confirmed the existence of a city as described in the Mahabharata.




லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14-01-2018 அன்று வெளியிடப்படுகிறது.